# ஆங்கிலேயர் ஆட்சிக்கு முந்திய இந்தியப் பொருளாதாரம்

## (Indian Economy before British Rule)


ஆசிரியர் :

பேராசிரியர்

**மா பா குருசாமி, எம் ஏ, எம் லிட், டி ஜி டி,**

பொருளியல்துறைத் தலைவர், ஆதித்தனர் கல்லூரி,

திருச்செந்தூர்



அணிந்துரை :

பேராசிரியர்

**டாக்டர் வேதகிரி சண்முகசுந்தரம்,**

எம் ஏ, எம் லிட்., பி எச்டி, டி பில், (ஆக்சன்)

பொருளியல்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்,

சென்னை



திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

79, பிரகாசம் சாலை, (பிராட்வே) சென்னை-1.

1979

© மாரியப்பன் (பாறைப்பட்டி) குருசாமி (1936)

1979 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED

கிளைகள் :

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம்-1 திருச்சிராப்பள்ளி-2

கழக வெளியீடு : கசுகரு

முதற் பதிப்பு: சூலை 1979

113393

X. 44
N79

ANGILEYER AATCHIKKU MUNTHIYA INDHIYA PORULAATHAARAM

அப்பர் அச்சகம், சென்னை-1. (II/1)

# பதிப்புரை

அண்மையில் பல உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டு மாணவர்கட்கு மேல்நிலைக் கல்வி அளிக்கப்பட்டு வருகின்றது. இதற்குப் பாடத்திட்டத்தை ஒட்டி வேண்டிய பாடநூல்கள் அரசாங்கமே வெளியிட்டு வருகின்றது. எனினும் பல்துறைக் கலைகளையும் பாங்குறப் பயிற்றுவிக்கத் துணை புரியும் கருவி நூல்கள் தமிழில் வெளி வந்தனவாகத் தெரியவில்லை.

ஆங்கிலத்தில் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு பொருள் பற்றியும் கருவி நூல்கள் பல வெளிவரக் காண்கின்றோம். தமிழிலும் அத்தகைய கருவி நூல்கள் வெளிவருதல் நலமாகும் எனக் கருதிக் கழகம் அத் துறையில் ஈடுபட்டுள்ளது.

இவ் வரிசை நூல்களில் கலைச்சொற் பட்டியல், மாதிரிக் கேள்வித்தாள்கள் சேர்த்துக் கட்டுரை முறையிலும் கருத்துத் தெளிவுபெற உதவும் முறையிலும் (Essay type and objective type) தரப்பட்டுள்ளன. பாடநூல்களை வெளியிடும் அரசின் முயற்சிக்கு இத்தகைய சின்னஞ்சிறு வெளியீடுகள் உறுதுணை யாகும் என்பதில் ஐயமில்லை.

பொருளாதாரத்துறையில் இத்தகைய அரிய நூலினை உருவாக்கித் தந்த பேராசிரியர் மா. பா. குருசாமி அவர்கட்கும் இந்நூலுக்குச் சீரிய அணிந்துரை வழங்கியுதவிய **டாக்டர் வேதகிரி சண்முகசுந்தரம்** அவர்கட்கும் கழகத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கல்வி வளர இத்தகைய நூல்களை வெளியிடும் கழகத்தின் முயற்சிகட்கு அரசின் ஆதரவும் கிட்டுமாயின், மேலும் இத்தகைய நூல்கள் பல வெளிவர வாய்ப்புண்டு என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்**

# அணிந்துரை

**டாக்டர் வேதகிரி சண்முகசுந்தரம்**
எம்.ஏ, எம்.லிட்., பி.எச்டி, டி.பில், (ஆக்சன்)
[பொருளியல் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்]

பொருளியல், வளர்ச்சி அடைந்த நாடுகளில் கல்லூரிகளில் மட்டுமன்றி உயர்நிலைப்பள்ளி, துவக்கப்பள்ளிகளிலுங் கூடப் பயிற்சி அளிக்கப்படுகின்ற துறையாகும். ஆயினும் இந்தியாவில் பல மாநிலங்களில் பொருளியல் படிப்பு கல்லூரி அளவில் மட்டும் வைக்கப்பட்டிருந்த நிலைமை மாறி இப்போது மேல் உயர்நிலை வகுப்புக்களிலும், வருங்காலத்து உயர்நிலை வகுப்புக்களிலும் இத் துறையினில் பயிலும் வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. ஒவ்வொரு நாட்டின் சமுதாய இயற்கைச் சூழ்நிலைகளை விளக்குவதுபோல் சில அடிப்படைப் பொருளியல் சிக்கல்களான உழைப்பு, பண்டமாற்று, ஊழியம், விஞ்ஞானவழி அமையும் பொருளாதார அமைப்புக்கள் போன்றவற்றை, கவிதைகள், கதைகள் போன்றவை மூலம் அறிவு புகட்டப்படுமானால் துவக்கப்பள்ளிகளிற்கூடப் பொருளியலுக்கு இடம் உண்டு என்பது நமக்குத் தெளிவாகத் தெரியும்.

நாட்டின் ஏழைமை, வேலையின்மை போன்ற சமுதாயச் சிக்கல்கள் மிக முக்கியமடைந்திருக்கின்ற இக்காலத்தில் பொருளியல் கருத்துக்களும் அவற்றைச்சார்ந்த விஞ்ஞான தொழில்நுட்பக் கருத்துக்களும் பரவலான நாட்டிலே அறியப் படாத காரணத்தால் ஏழைமை எப்பொழுது அகலும் என்ற ஏக்கம், அச்சம், திகைப்பு போன்றவற்றிற்கு இடம் ஏற்பட்டிருக்கிறது.

(புதிய பொருளியல்) ஆடம்ஸ்மித் (Adam Smith) என்ற தத்துவ மேதையால் உருவாக்கப்பட்டது என்பதை அறிந்த நாம் அவர்வழி வந்த ஜே. எம். கீன்ஸ் என்பவரின் கருத்தினை இங்கு நினைவுகூரலாம். பிற்போக்குச் சக்திகளாலும் சமுதாயத்திற்கு ஒவ்வாத அமைப்புக்களாலும் நிகழும் தீமைகளுக்குமேல் மிகவும் கொடியது தவறான கருத்துக்களால் எழும் தொல்லைகள். பொருளாதாரச் சிக்கல்களை அன்றாடம் சந்திக்கின்ற குடும்பத்தலைவர்கள்—தலைவிகள், உழவர்கள், தொழிலாளர்கள், ஆட்சிநடத்துவோர், ஆட்சிக்குட்பட்டுப் பெரிய நிறுவனங்களை இயக்குவோர், பொதுப்பணிகளில் ஈடு

பட்டோர் இத்தகைய பலருக்கும், அடிப்படைப் பொருளியல் கருத்துக்கள் யாவை? அவற்றிற்குட்பட்ட பொருளியல் அமைப்பு என்ன? இக்கருத்துக்கள் எத்தகைய பொருளாதார உள்நோக்கம் உடையன என்பவற்றை அறிந்துகொள்வது நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாதது. புள்ளி விவரங்கள், கணிதம், கலை, தத்துவம், சமூகவியல், அரசியல் போன்ற பல தனித்துறைகளுடன் இயைந்து விளங்குகின்ற, ஒரு முக்கிய 20ஆம் நூற்றுண்டின் அறிவியல் துறைக்குப் 'பொருளியல்' எனப் பெயரிடுகிறோம்.

ஆதி மனிதன் இயற்கையைக் கண்டு அஞ்சி வழிபாட்டு முறைகளைச் சமயங்களை அமைத்ததுபோல் சென்ற இரண்டு நூற்றுண்டுகளில் ஏழைமை, வாழ்க்கைச் சிக்கல்கள் போன்றவற்றைக் கண்டு அஞ்சிய மனிதன், தனது மதிநுட்பத்தினல் இந்தப் புதிய துறையினைத் தோற்றுவித்தான். பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்கு இத் துறை மிகவும் துணைபுரிகின்றது. மறைமலையடிகள் வழிவந்த தமிழ், சமயம், பண்பாடு போன்றவற்றைப் பேணி வளர்க்கும் கழகம் இத் துறையில் ஈடுபட்டு ஆற்றுகின்ற தொண்டு போற்றற்பாலது. நாடும் தமிழ் மக்களும் ஆவன செய்தால் இத் தொண்டு பெரிதும் பயனளிக்கும். உலக மொழிகளில் இன்று சிறந்து விளங்கும் ஆங்கில மொழி ஆக்ஸ்போர்டு (Oxford) பல்கலைக்கழக அச்சகத்தால் இன்று பொலிவுற்று விளங்குகின்றது. அதுபோன்று நமது தமிழ்மொழி சிறப்புறக் கழகம் பெரிதும் உதவி புரிகின்றது. ஆக்ஸ்போர்டு பதிப்பகத்தின் வெற்றிக்கு அடிப்படை பல நூற்றுண்டுகட்குமுன்பு விவிலிய (Bible) நூலைச் சிறப்புறப் பதிப்பித்ததுதான். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள 50 மில்லியன் தமிழ்மக்களுக்கும் கழகம் அம் மேலை நாட்டுப் பதிப்பகம் போன்ற தமிழ்மறை நூல்களை வெளியிட்டுத் தாய் மொழியைச் சிறப்புறச் செய்கின்றது. ஆங்கிலேய மக்களும், நிறுவனங்களும் அறிவு நூல் பதிப்பகங்களைப் பயன்படுத்திக் கொண்டதைப் போன்று தமிழ்மக்கள் இன்றும் நம் பதிப்பகங்களைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இந்நிலை மாறப் பொருளியல் துறையில் ஈடுபட்டுள்ள பேராசிரியர் மா. பா. குருசாமி அவர்களை ஊக்குவித்த கழகப் பதிப்பாளரும் சுறுசுறுப்புள்ள நிர்வாகத்தினருமான இரா. கல்யாணசுந்தரம் அவர்களும், தமிழ்நூல் வெளியீட்டுச் செம்மல் கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்களும் பொருளியல் துறையில் நூல்களை வெளியிட எடுத்துக்கொண்ட முயற்சி நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் துணையாகும்.

துவக்க நூல் எழுதுவது மிகவும் கடினம். ஆராய்ச்சித் துறையில் எழும் ஐயப்பாடுகளை எல்லாம் பொருட்படுத்தாது துணிச்சல் மிகக்கொண்டு துவக்க நூல் எழுதுவது எளிது. ஆனால், அது சரியன்று. ஐயப்பாடுகளைத் தோற்றுவித்து விளக்கமளிக்காமல் விட்டுவிடுவது எந்த ஆசிரியருக்கும், எழுத்தாளருக்கும் நல்லதன்று. துவக்க நூல் எழுதும் துறையில் வல்லுநர்கள் மிக்க முயற்சி எடுக்க வேண்டும். அதிலும் சிறந்தது இந்த வளரும் துறையில் இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தலாகும். அத்தகைய இளம் எழுத்தாளர் ஆயிரம் காலத்துப் பயிராக அறிவுப் பெருக்கத்திற்குப் பயன்படுவர். *நோபல் பரிசுபெற்ற ஆங்கிலப் பொருளியல் மேதை டாக்டர் சர்ஜான் இக்ஸ், தாம் எழுதிய "சமுதாய அமைப்பு: பொருளியலுக்கு ஓர் அறிமுகம்" என்ற நூலை எழுதுவதற்குக் காரணம் பொருளியல் என்றால் என்ன? அதைச் சமுதாய நோக்கத்துடன் கற்பிப்பது எப்படி? என்ற உண்மையைக் கண்டறிந்தபின், அந்நூல் எழுத முற்பட்டதை அவரும், அவருடைய நண்பரும் சொல்லப் பலமுறை நான் கேட்டுள்ளேன். இத்தகைய நூலாசிரியர்கள் தமிழகத்தில் தோன்ற வேண்டுமாயின் கழகம் போன்ற அறிவுப்பண்ணைகளும், நிர்வாகப் பாரம்பரியம் சிறந்து விளங்கும் நிறுவனங்களும் நாட்டிற்குத் தேவை.

———

*HICKS J. R: SOCIAL FRAME WORK :- An Introduction to Economics. (Oxford University Press, 3rd Edition, Oxford 1960).

# முன்னுரை

மேல்நிலைப் பள்ளியில் பொருளியலைக் கற்றுக் கொடுக்கத் தொடங்கி ஓராண்டு ஆகிவிட்டது. அரசினர் வெளியிடுகின்ற பாட நூலினைப் பின்பற்றி ஆசிரியர்கள் பாடத்தைக் கற்பிக்க மாணவர்கள் கற்கின்றனர்.

மாணவர்கள் ஆழமாகவும், விரிவாகவும், தெளிவாகவும் கருத்துக்களை அறிந்து கொள்ளக் கருவி நூல்கள் தேவை. ஒரே பாடத்தை வெவ்வேறு கோணங்களில் விளக்குகின்ற பொழுது மாணவர்கள் நுண்ணறிவு பெறுவர். இந்த நோக்கில் எழுதப் பெறுகின்ற நூல்களின் தொகுதியில் இதுவும் ஒன்று.

இது மேல்நிலைப் பொருளியல் முதலாண்டுப் பாடத் திட்டத்தின்படி அமைந்த முதல் நூல். இந்நூலில் தெளிவாகக் கருத்துக்களைப் பகுத்தும் தொகுத்தும் கொடுக்க முயன்றிருக்கின்றேன்.

வாணிப நோக்கில் நூல்களை வெளியிடும் இக்காலத்தில் பொதுநல நோக்கில் மாணவர்கள் நலன் கருதிக் கருவி நூல்களை வெளியிட முன்வந்திருக்கும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் போற்றுதற்குரியதாகும். இப் பணிக்கு ஊற்றுக்கண்ணாயிருக்கும் பொது மேலாளர் உயர்திரு. இரா. கலியாணசுந்தரம் அவர்களுக்கும், நல்வாழ்த்து நல்கி ஊக்குவிக்கும் ஆட்சியாளர் உயர்திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களுக்கும், இந்நூலுக்குச் சீரிய அணிந்துரை வழங்கிய டாக்டர் வேதகிரி சண்முகசுந்தரம் அவர்கட்கும் எனது இதயங்கனிந்த நன்றிகள்.

திருச்செந்தூர்,
11—6—'79

மா. பா. குருசாமி

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இந்தியப் பொருளாதாரப் பின்புலம் | 1 |
| 2. | தன்னிறைவு பெற்ற கிராமச் சமுதாயங்கள் | 10 |
| 3. | நிலவுடைமையின் இயல்பும் விளைவும் | 20 |
| 4. | சிறு தொழில்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் | 28 |
| 5. | பண்டைய கடன் முறை | 35 |
| 6. | கிழக்கிந்திய நிறுவனத்தின் வாணிப நடவடிக்கைகள் | 39 |
| 7. | இந்திய அரசியல் பொருளாதாரமும் கிழக்கிந்திய நிறுவனமும் | 48 |
| 8. | நிலவுடைமை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் | 57 |
| 9. | சமுதாயப் பொருளாதாரச் சூழ்நிலை | 73 |
| | கலைச்சொற்கள் | 79 |
| | கருவி நூல்கள் | 80 |
| | மாதிரிக் கேள்வித் தாள் I | 81 |
| | மாதிரிக் கேள்வித்தாள் II | 84 |

# ஆங்கிலேயர் ஆட்சிக்கு முந்திய இந்தியப் பொருளாதாரம்

## 1. இந்தியப் பொருளாதாரப் பின்புலம்

ஒரு நாட்டின் பொருளாதார அமைப்புக்கும் வளர்ச்சிக்கும் அந்த நாட்டின் வரலாற்றுப் பின்புலத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. ஒரு நீண்ட மரபின் தொடர்ச்சியாக நமது வாழ்க்கை அமைகின்றது. ஆதலால் முன்பிருந்தபொருளாதார நிலையை அறியாமல் இன்றைய பொருளாதார நிலையையும் அதிலுள்ள சிக்கல்களையும் அறிந்துகொள்ளவோ, அவற்றிற்கான தீர்வுகளை ஆராய்ந்து கண்டுகொண்டு செயல்படவோ இயலாது.

இன்றைய இந்தியப் பொருளாதாரம் ஓரளவு கட்டுக்கோப்பினைப் பெற்று வளர்ந்து வருகின்றது. ஆனால், நாம் தீர்க்க வேண்டிய சிக்கல்கள் பல உள்ளன. இவற்றை எல்லாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள நீண்டு வரும் இந்தியப் பொருளாதார வரலாற்றை ஓரளவு பகுத்தாய்ந்து அறிதல் தேவையாகின்றது. இந்தியப் பொருளாதாரத்தில் ஆங்கிலேயர்களின் வருகையால் மிகப்பெரும் மாற்றம் ஏற்பட்டது. நமது பொருளாதாரத்தின் அடிப்படையில் பல மாற்றங்கள் தோன்றின. ஆதலால் ஆங்கிலேயர்களின் வருகையை இந்தியப் பொருளாதாரத்தில் ஒரு திருப்பு முனையாகக் கருதலாம். ஆதலால் அவர்கள் இந்தியாவிற்குள் வணிகம் செய்ய வந்து, ஆட்சியாளர்களாகக் கோலோச்சத் தொடங்குவதற்கு முன்பிருந்த பொருளாதாரப் பின்புலம் நமது பொருளியல் பாடத்தின் தொடக்கமாகின்றது.

நமது நாட்டின் பொருளாதார வரலாறு மிகவும் பழைமை யானது. உலகில் பிற நாடுகளில் நாகரிகம் தோன்றாத காலத்திலேயே நமது தாய்த்திருநாட்டில் குடும்பம், சமுதாயம், அரசு ஆகியவை அமைந்திருந்தன. இயற்கை வளத்தையும், எண்ணித் துணிந்து செயலாற்றும் திறமை மிக்க மக்களையும் கொண்டிருந்த பாரதம் பதினெட்டாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் தனக்கென்று ஒரு பொரு ளாதார அமைப்பை உருவாக்கிக்கொண்டிருந்தது. அதன் பல்வேறு இயல்புகளை இங்கே விளக்கலாம்.

**நிலப்பிரபுத்துவ முறை (feudalism)**

ஒரு நாட்டின் பொருளாதார அமைப்புமுறை அந்த நாட்டிலுள்ள உற்பத்தி முறையையும், உற்பத்திக்காரணி களின் உடைமை நிலையையும் ஒட்டி அமையும். ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வாணிபம் செய்யவந்த காலத்தில் நம் நாட்டு மக்களின் முதன்மைத் தொழிலாக வேளாண்மை இருந்தது. வேளாண்மையில் தலையாய உற்பத்திக் காரணி நிலம். ஆதலால் அன்றைய பொருளா தார அமைப்பிற்கு அச்சாணியாக அமைந்திருந்தது நில உடைமையே ஆகும்.

நிலத்தைப் பெருமளவில் பெற்றிருந்த நிலக்கிழார்கள் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர். நிலமும் கால்நடை களும் பொன்னும் பொருளும் செல்வங்களாக விளங்கின. எனவே, இவற்றைப் பெருநிலக்கிழார்கள் பெற்றிருந்தனர். அன்றிருந்த நில உடைமை முறையின்படி மன்னர் குறுநில மன்னர்களையும், குறுநில மன்னர்கள் நிலக்கிழார்களையும் ஆட்சிக்கும் வருவாய்க்கும் சார்ந்திருந்தனர். நிலக்கிழார்கள் விளைபொருள்களில் ஒரு பகுதியை நிலத்தீர்வையாக வழங்கினர். மேலும் போர்க்காலங்களில் போர்வீரர்களைத் திரட்டித்தருகின்ற பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டனர்.

பொருளாதார—அரசியல் அமைப்பு முறையில் நிலக் கிழார்கள் முதுகெலும்பு போல இருந்ததால் அதனை

நிலப்பிரத்துவ முறை (feudalism) எனப் பொருளியலறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

**வாழ்க்கைத் தொழில்கள்:**

அக்காலத்தில் வேளாண்மை மக்களின் வாழ்க்கை முறையாக இருந்தது. பெரும்பாலான மக்கள் பயிர்த் தொழிலையே செய்து வாழ்ந்தனர். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்," என்பது பொதுநெறியாக அமைந்தது. நாடெங்கும் நிலவளம், நீர்வளம், காட்டு வளம் ஆகியவற்றை ஒட்டிச் சிற்றூர்கள் சீர்பெற்று வளர்ந்திருந்தன. சிற்றூர் மக்கள் தங்கள் ஊரைச் சுற்றியிருந்த நிலத்தை நிலக்கிழார்களின் விருப்பப்படி சாகுபடி செய்து வாழ்ந்து வரலாயினர்.

பயிர்த்தொழிலோடு தொடர்புடைய சிறுதொழில்கள் இல்லத் தொழில்களாகச் செழித்திருந்தன. விளைபொருள்களையும் இயற்கையின் கொடையாகக் கிடைத்த காட்டு, கனி வளங்களையும் மூலப்பொருள்களாகக் கொண்டு துணி, மண்பாண்டங்கள், உலோகப் பாண்டங்கள், பொருள்கள், மரச்சாமான்கள், எண்ணெய், பட்டாடைகள், அணிகலன்கள் போன்றவை செய்கின்ற தொழில்கள் சிறப்புற வளர்ந்தோங்கி இருந்தன.

இயல்பாகத் தொழில்களின் அடிப்படையில் ஒருவகைத் தொழில் (வேலை) பகுப்பு முறை உருவாகியிருந்தது. இதற்கும் சாதிப்பகுப்பு முறைக்கும் ஓரளவு நெருங்கிய தொடர்பினைக் காணலாம்.

சில வட்டார மக்களிடம் அரிய கலைப்பொருள்களைப் படைக்கும் ஆற்றல் வியப்படையத்தக்க வகையில் வளர்ந்திருந்தது. அவர்கள் உற்பத்தி செய்த மெல்லிய பட்டாடைகளையும், கவினழகு மிக்க காசுமீரச் சால்வைகளையும் எழில் மிகுந்த கவினுறு அணிகலன்களையும், கலங்கள், கட்டில்கள்

போன்ற ஆடம்பரப் பொருள்களையும் செல்வர்கள் வாங்கி ஆதரித்து வந்தனர்.

மொத்தத்தில் மக்கள் வேளாண்மையிலும், தொடர்புடைய தொழில்களிலும், சமுதாயத்திற்கு வேண்டிய காவல் வாணிபம் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வாழ்ந்தனர். மக்களின் தேவைகள் குறைவாக இருந்தன. அவற்றை நிறைவு செய்யும் வகையில் தொழில்களும் பணிகளும் பாங்குற அமைந்திருந்தன. கிராம சமுதாய அமைப்புக் கேற்ற வகையில் எளிய முறையில் பொருளாதார வாழ்க்கை இயங்கியது.

வளமும் வாணிகமும் :

இந்தியா ஓர் இயற்கை வளமிக்க நாடு. இங்கு கங்கை, காவிரி போன்ற வற்றாத ஆறுகள் ஓடுகின்றன. பல்வேறு வகையான வளமான நிலம் இருக்கின்றது. இயற்கையின் கொடையாக அமைந்த அழகான செழித்த காடுகளைக் கொண்ட மலைகள் வளத்திற்கு வளம் சேர்க்கின்றன. பூமித்தாயின் மடியில் புதைந்து கிடக்கும் கனி வளங்களும், நாட்டைச் சூழ்ந்திருக்கும் கடலின் கருவூலத்தில் நிறைந்திருக்கும் விலைமதிப்பற்ற முத்துக்களும், சங்குகளும், வளர்ந்து வரும் வளங்களும் நமது நாட்டின் செல்வச் செழிப்பிற்கு ஆக்கமளிக்கின்றன.

பதினெட்டாம் நூற்றாண்டின் பாரதத்தின் செல்வ வளம் உலகத்தினரின் கவனத்தை ஈர்த்தது. கடலோடிகளின் கனவுநாடாகப் புகழ்பெற்றிருந்த பாரதத்தை நோக்கி உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வாணிபம் செய்யக் கப்பல்கள் வந்து சென்றன.

இந்தியாவிற்குப் பெயரையும் புகழையும் தந்து, வாணிபத்தில் தனிச்சிறப்பினைத் தேடிக் கொடுத்த வாணிபப் பொருள்களை மூன்று வகைகளாகப் பகுக்கலாம்.

முதலாவது வகை, விளை பொருள்கள். இவை வளமான நிலத்தைப் பயிரிட்டதாலும், இங்கிருந்த கான் வளங்களைக் கட்டிக்காத்ததாலும் கிடைத்தன. இவற்றிற்கு எடுத்துக்காட்டுக்களாக அரிசி, மிளகு கடுகு, நாரத்தை, எலுமிச்சை, அபின், துவரை ஆகியவற்றைக் கூறலாம். விளைபொருள்களை மிகுதியாகப் பெற்றிருந்த வங்க நாட்டி லிருந்து பல பொருள்கள் வெளிநாடுகளுக்குச் சென்றன.

இரண்டாவதாக, வாணிபத்தில் செய்பொருள்கள் பல சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தன. கைத்திறன் காட்டி, இந்தியக் கைவினைஞர்கள் செய்த அழகும் நுட்பமான வேலைப்பாடும் அமைந்த பொருள்களை வெளிநாட்டினர் விரும்பி வாங்கினர். இத்தகைய பொருள்களை அனுப்பிப் புகழ் பெற்றிருந்த பகுதி தஞ்சாவூர், தஞ்சையிலிருந்து தரணி போற்றிய பல்வகைத் துணிகள் ஏற்றுமதியாயின. அவற்றுள் மெல்லிய மஸ்லின் துணிகள், பலவண்ண ஆடைகள், நுண்ணிய துணிகள், அச்சடித்த கண்கவர் துணிகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். டச்சுக் காரர்களும் டேனிஷ்காரர்களும் இவற்றைப் பெருமளவில் வாங்கியதாக வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன.

மூன்றாவதாக, இயற்கை வாரி வழங்கியிருந்த பொருள் களில் சிலவற்றிற்கு வெளிநாடுகளில் நல்ல (கிராக்கி) விலை மதிப்பு இருந்தது. வெடியுப்பு, பிசினுேத்த அரக்கு, மெழுகு, புனுகு, மைசூர்க் காடுகள் போன்றவற்றில் கிடைத்த கப்பல் கட்டுதல் போன்றவற்றிற்குப் பயன்படும் அரிய மரங்கள், விலைமதிப்பற்ற சந்தனக்கட்டைகள், யானைத் தந்தங்கள், தங்கச் சுரங்கங்களில் கிடைத்த பொன், மாணிக்கக் கற்கள், நெல்லூர், எல்லோரா போன்ற இடங்களில் கிடைத்த தாமிரம், வைரக்கற்கள் ஆகியவற்றை வாங்கிச்செல்ல வெளிநாட்டினர் வந்தவண்ணம் இருந்தனர்.

இந்தியாவிற்குள் சில பொருள்கள் இறக்குமதியாயின. அவற்றுள் சுமத்திரா, மலாக்கா, கிழக்கிந்தியத் தீவுகள் ஆகியவற்றிலிருந்து நறுமணப் பொருள்களும், சீனத்தி

லிருந்து பட்டுப்போன்ற வணிகப் பொருள்களும் பிற நாடுகளிலிருந்து குதிரைகள், யானைகள், பொன், மரக் கட்டைகள் போன்றவையும் வந்தமை சுட்டிக்காட்டத்தக்க தாகும்.

வெளிநாட்டு வாணிபம் போன்று உள்நாட்டு வாணிபமும் வளர்ச்சி பெற்றிருந்தது. நீர் வழிகளிலும் நில வழிகளிலும் பொருள்களைக் கொண்டுசென்றனர். மூலப் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு சென்று செய்பொருள்களாக மாற்றினர். இதற்கு எடுத்துக்காட்டாகத் தஞ்சாவூர், பம்பாய், சூரத் ஆகிய இடங் களிலிருந்து பஞ்சினையும், வங்கத்திலிருந்து பட்டினையும் பெற்றதை வரலாற்று ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியிருப் பதனைக் கூறலாம்.

வாணிப வளர்ச்சி தொழில் வளர்ச்சிக்குத் துணை செய்தது. தொழில் வளர்ச்சியால் மக்கள் அனைவரும் வேலை வாய்ப்பினைப் பெற்று வாழ்ந்தனர்.

நிலையற்ற அரசியல் :

பதினெட்டாம் நூற்றாண்டின் பின்பாதியில் அரசியல் சூழ்நிலை மாறத் தொடங்கியது. அதுவரை இந்தியப் பொருளாதார வாழ்வின் சீருக்கும், சிறப்புக்கும் காரணமாக இருந்த அரசியலில் நிலையான போக்குத் தொடரவில்லை. அதற்கு முன்பு வடக்கிலும் தெற்கிலும் வலிமைமிக்க இந்து மன்னர்களும் முகமதிய மன்னர்களும் ஆண்டு வந்தனர். அவர்களுடைய பாதுகாப்பும் ஆதரவும் கிடைத்த தால் மக்கள் தங்களுடைய பணிகளைச் செவ்வனே செய்தனர். நாட்டில் அமைதி நிலவியது.

மாறிய அரசியல் சூழ்நிலையில் போரும் குழப்பமும் தலைதூக்கின முகமதிய மன்னர்களும், இந்து மன்னர்களும் தங்களுக்குள் சண்டையிடத் தொடங்கினர். ஒற்றுமையற்ற நாட்டில் அரசியல் உறுதிப்பாடு இல்லை. "தடி எடுத்தவன்

தண்டல்காரன்'' என்னும் நிலை உருவானது. வலிமை மிக்க குறுநில மன்னர்கள் தங்கள் போக்கில் விருப்பம் போல் தங்கள் பகுதிகளை ஆளத் தொடங்கினர். அவர்கள் பெரிய நிலக்கிழார்களை உருவாக்கினர். முகமதிய மன்னர்கள் வழங்கிய நிலக்கொடைகளைப் பெற்ற அரசின் உயர் அலுவலர்கள் பலர் நிலக்கிழார்களாக மாறினர். இத்தகைய நடவடிக்கைகள் மக்களுக்கு இடையூறுகளாக இருந்தன.

நாட்டிலிருந்த குழப்பம் நிலப்பிரபுத்துவ முறைக்கு ஏற்றதாக இருந்தது. பெரு நிலக்கிழார்களில் அரசியல் செல்வாக்குப் பெற்றவர்கள் மக்களை ஆட்டி வைக்கும் நிலை வந்துவிட்டது.

பொருளாதாரச் சூழல் :

ஆட்சியில் ஏற்பட்ட சீர்குலைவாலும், நிலையற்ற போக்காலும் பொருளாதாரச் சூழ்நிலையும் மாற்றத்திற்குள் ளானது. குறுநில மன்னர்களும் பெருநிலக்கிழார்களும் நிலத்தைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். ஆட்சிப்பிடிப்பு அற்றுப்போன மகாராட்டிர மன்னர் குடும்பத்தைச் சார்ந்த பீஷ்வாக்கள் நிலக்கிழார்களாக மாறினர். பெருநிலக்கிழார்களிடம் பொருளாதார ஆற்ற லும், அரசியல் அதிகாரமும் இணைந்து குவிந்ததால், அவர்கள் மிக்க செல்வாக்கும் வலிமையும் பெற்றவர்களாக மாறிவிட்டனர்.

குடிமக்களின் நிலை இரங்கத்தக்கதாக இருந்தது. ஆட்சியாளர்கள் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நிலை நாட்ட முயலாமல் மக்களிடமிருந்து 'கிடைத்தது இலாபம்' என்று சுரண்டத் தொடங்கினர். இத்தகைய சுரண்டல் மேல்மட்டத்தில் மன்னரில் தொடங்கி கீழ்மட்டத்தில் கிராமத்தலைவர்கள் வரை நோயாகப் பரவி இருந்தது. கேள்விகேட்பாரற்ற நிலையில் ஆட்சிப் பொறுப்பிலிருந்

தவர்கள், 'வைத்ததே சட்டம்; கொண்டதே வரி' என்றிருந்ததால், ஏழை எளிய மக்கள் மிகவும் அல்லற்பட்டனர்.

வடக்கிலிருந்து தென்னகச் சூழ்நிலை ஓரளவு மாறுபட்டுக் காணப்பட்டது. ஏனென்ருல் வடக்கினைப் போலத் தெற்கில் அரசியல் குழப்பங்கள் மலியவில்லை. ஓரளவு ஆட்சியில் நிலையான போக்கு இருந்தது. தெற்கிலும் நிலக்கிழார்களின் ஆதிக்கம் ஏற்பட்டது. நிலத்தை மையமாகக் கொண்டு பொருளாதார வாழ்க்கை சுழன்றது.

சமுதாய வாழ்க்கை :

அரசியல், பொருளாதாரச் சூழ்நிலைகளை ஒட்டிச் சமுதாய வாழ்க்கையிலும் மிகுதியான ஏற்றத்தாழ்வும் கொடுமைகளும் காணப்பட்டன. இந்திய சமுதாய வாழ்க்கையின் உயிர்த்துடிப்பான சமுதாய உணர்வு மங்கி மறையத் தொடங்கியிருந்தது.

பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்று நான்கு 'வருணப்' பிரிவுகளில் தொடங்கி, 'ஆயிரம் உண்டிங்கு சாதி' என்று சொல்லத்தக்க வகையில் எண்ணற்ற சாதிகள் தோன்றி வளர்ந்திருந்தன. அறிவாற்றல் படைத்த பிராமணர்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர். திறமை கொண்ட சத்திரியர்களும், வைசியர்களும் சமுதாயத்தின் மேல்மட்டத்தில் இருந்தனர். உழைத்த, ஆனுல் அறியாமை இருளில் தடுமாறிய மக்கள் வாழ்க்கையில் கீழ்மட்டத்தில் உயர்குடியினருக்குக் குற்றேவல் செய்கின்றவர்களாகவும், கொடுத்ததைப் பெற்றுக்கொண்டு எடுபிடிப்பணியாளர்களாகவும், கொத்தடிமைகளாகவும் வாழ்ந்தனர்.

மக்கள் தங்களுடைய ஆட்சியாளர்களாக இருந்த மேட்டுக் குடியினரை ஏற்றுக்கொண்டதால், எத்தகைய எதிர்ப்பும் காட்டாமல் செயல்பட்டனர். இதனுல் சமுதாய வாழ்க்கை 'படிக்கட்டு அதிகாரமுறையில்' அமைதியாகச் செயல்படுவதாகக் காட்சியளித்தது.

**சமயமும் வாழ்வும் :**

பெரும்பாலான மக்கள் இந்து சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். அவர்கள் சமுதாய ஏற்றத்தாழ்வு இறைவனின் படைப்பு என்று நம்பினர். கண்மூடிப் பழக்க வழக்கங்களுக்கும், சமயச் சடங்குகளுக்கும் ஆட்பட்டுக் கிடந்த மக்கள் இருந்த வாழ்க்கை 'இறைவன் சித்தப்படி' அமைந்ததாக ஏற்றுக்கொண்டனர். 'எல்லாம் தங்களது தலைவிதிப்படி' நடக்கும் என்று நம்பினர்.

முகமதியர்கள் வடக்கில் சில பகுதிகளில் மிகுதியாகவும், தெற்கில் குறைவாகவும் வாழ்ந்து வந்தனர். காலப் போக்கில் இந்துக்களும், முகமதியர்களும் இணைந்து வாழப் பழகிக்கொண்டனர்.

**ஒரு கண்ணோட்டம் :**

மொத்தத்தில் பதினெட்டாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் சீரோடும் செழிப்போடும் வாழ்ந்த இந்திய மக்களின் வாழ்க்கையில் துன்பமும் தொல்லையும் படரத் தொடங்கின. நிலக்கிழார்களிடமும் வணிகர்களிடமும் செல்வம் குவிந்தது. மற்றவர்களுக்கு வறுமை சொந்த மாகியது.

இருந்தாலும் இந்தியாவின் செல்வச் செழிப்பையும், கிடைக்கும் பொருள்களின் சிறப்பையும் அறிந்த மேலை நாட்டினர் இந்தியாவோடு வாணிபத்தொடர்புகளை உறுதி யாக அமைத்துக்கொள்வதில் தீவிரமாக இருந்தனர். வாணிபத் தொடர்பு அரசியல் செல்வாக்கை அவர்களுக்கு அளித்தது. இந்தியப் பொருளாதாரக் கட்டமைப்பும், இயல்புகளும் அடியோடு மாறத் தொடங்கின!

## 2. தன்னிறைவுபெற்ற கிராமச் சமுதாயங்கள்

காந்தியடிகள் கூறுவதைப் போல, இந்தியா அன்றும் இன்றும் கிராமங்களிலேயே வாழ்கின்றது. குறிப்பாக, பதினெட்டாம் நூற்ருண்டின் இடைக்காலத்தில் இந்தியப் பொருளாதாரம் என்பது இந்தியக் கிராமப் பொருளா தாரமாகவே இருந்தது. கிராம சமுதாயத்தை, வாழ்க்கை முறையை, பொருளாதார நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ளாமல் நாட்டுப் பொருளாதாரத்தை அறிந்து கொள்ள முடியாது.

பதினெட்டாம் நூற்ருண்டில் நமது நாட்டில் மன்னர் களின் தலைநகரங்கள், துறைமுகப் பட்டினங்கள், பெருங் கோவில்கள் அமைந்த திருத்தலங்கள், வாணிப மையங்கள் எனச் சில நகரங்கள் இருந்தன. பெரும்பாலும் மக்கள் சிற்றூர்களில் வாழ்ந்தார்கள். ஒவ்வொரு கிராமமும் தன்னளவில் ஒரு தன்னிறைவு (self-sufficiency) பெற்ற கோட்டையாகத் திகழ்ந்தது. அன்றைய கிராம சமுதாயப் பொருளாதார வாழ்க்கையை விளக்கலாம்.

### மாருத கிராம நாகரிகம் :

இங்கிலாந்தில் வேளாண்மைப் புரட்சியும், தொழிற் புரட்சியும் ஏற்பட்டதன் விளைவுகள் உலகெங்கும் ஊடுருவிச் சென்றன. பல நாடுகளில் தொழிற் புரட்சியின் தாக்கல் ஏற்பட்டது. வேளாண்மையும் தொழிலும் எந்திரமயமாக மாறின. ஆனல், இந்தியக் கிராம வாழ்க்கை புற அலைகளால் பாதிக்கப்படவில்லை. இதனை டி. ஆர். காட்கில் (D. R Gadgil) ''பல நூற்ருண்டுகளாக இந்தியா மேற் கத்திய நாடுகளோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்த

போதிலும், 19 ஆம் நூற்றுண்டு வரை அத் தொடர்பு இந்தியப் பொருளாதாரக் கட்டமைப்பைப் பாதிக்கவில்லை," என்று கூறுகின்றார்.

வெளிநாட்டு மாற்றங்களால் பாதிக்கப்படாததைப் போன்றே இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களாலும் குழப்பங்களாலும் நம்முடைய கிராமங்களின் தனித்தன்மை அழியவில்லை. இதனை 1812ஆம் ஆண்டில் கிழக்கிந்திய நிறுவனத்தின் இரகசியக் குழு (Committee of Secrecy of East India Company), "சீர்குலைகின்ற, பிரிக்கின்ற அரசுகளைப் பற்றிக் குடிமக்கள் தங்களை அலட்டிக்கொள்ளவில்லை. கிராமம் முழுமையாக இருப்பதால், அவர்கள் அதிகாரம் மாற்றப் படுவதையோ அல்லது எந்த ஆட்சி அதிகாரம் செலுத்துகின்றது என்பதையோ பற்றிக் கவலைப்படவில்லை. அதனுடைய அகப்பொருளாதாரம் மாருமலேயே இருக்கின்றது" என்று குறிப்பிட்டுள்ளது.

மரபுகள், பழக்க வழக்கங்கள், பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் மாருத நாகரிகத்தையும் சமுதாய அமைப்பையும் நெடுங்காலமாகக் கிராமங்கள் கொண்டிருந்ததை சர் சார்லஸ் மெட்காபே தமது குறிப்பில் (Sir Charles Metcalfe's Minute of 1830) "கிராம சமுதாயங்கள் சின்னஞ்சிறு குடியாட்சிகள். அவற்றிற்குத் தேவையானவையெல்லாம் அவற்றிற்குள்ளேயே கிடைக்கின்றன. பெரும்பாலும் வெளித் தொடர்புகளின்றித் தனித்து நிற்கின்றன. மற்றவை எல்லாம் நிலைத்திருக்காதபோது அவை மட்டும் நிலைபெற்றிருக்கின்றன. இந்தச் சமுதாயங்களின் இணைப்புகள், ஒவ்வொன்றும் தன்னாட்சி பெற்ற சிறிய அரசாகத் திகழ்கின்றது," என்று கூறுகின்றார். தன்னிறைவு பெற்ற கிராமச் சமுதாயங்களின் தனித் தன்மைகளை ஒவ்வொன்றாக விளக்கலாம்.

### தொழில் பகுப்பும் தன்னிறைவும் :

ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்ற பொருளாதார அலகாக (unit) விளங்கும் வகையில் மக்களுக்குத்

தேவையான பொருள்களும் பணிகளும் கிராமத்திற்குள்ளேயே கிடைத்தன. அதற்கான வகையில் தொழில் பகுப்பு இருந்தது.

முதன்மைத் தொழிலாக வேளாண்மை இருந்தது. பெரும்பாலான மக்கள் உழவுத்தொழில் செய்தனர். நிலவுடைமை (land ownership) முறை உறுதியாக அமைந்துவிட்டது. நிலவுரிமை பரம்பரையாகக் கைமாறி வந்தது. ஒரு நிலத்தில் குடியேறி, சீர்திருத்தி அதனைச் சாகுபடி செய்தவர்களுக்கு நிலம் சொந்தமாகியது. ஒருவர் காலத்திற்குப் பிறகு அவருடைய பிள்ளைகளுக்கு (வாரிசுதாரர்களுக்கு) நிலம் சொந்தமாகியது. நிலத்தைப் பணம் கொடுத்து வாங்கி, விற்கும் வழக்கம் வரவில்லை. குடும்பம் குடும்பமாகத் தங்கள் நிலங்களில் பாடுபட்டனர். சிலர் குத்தகைக்கு நிலத்தைப் பெற்றுச் சாகுபடி செய்தனர். குத்தகை அல்லது வாரமாக விளைச்சலில் ஒரு பகுதியை அளித்தனர்.

வேளாண்மை வாழ்க்கை முறையாக இருந்தது. தங்களுக்கு என்னென்ன வேண்டுமோ அவற்றை எல்லாம் விளைய வைத்தனர். இன்றுபோல அன்று வாணிப நோக்கில் எதையும் சாகுபடி செய்யவில்லை. தங்களுக்கு வேண்டிய உணவு தானியங்கள், பருப்பு வகைகள், காய்கறிகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி போன்றவற்றை எல்லாம் பயிரிட்டனர். தங்களுக்குப் போக எஞ்சியிருப்பதை மட்டும் தங்களுக்கு வேண்டிய பிற பொருள்களுக்காக பண்டமாற்று (barter) முறையில் மாற்றிக்கொண்டனர்.

ஒவ்வொரு வேளாண்மைக் குடும்பத்திலும் பசு, எருமை, காளைகள், ஆடுகள், கோழிகள் போன்ற கால்நடைகள் தேவையான அளவில் இருந்தன. அவற்றின் மூலம் பால், எரு, இறைச்சி போன்றவற்றைப் பெற்றுக்கொண்டனர்.

உழவுத்தொழிலுக்கு வேண்டிய கருவிகளை உருவாக்கித் தருகின்ற கைவினைஞர்கள் ஊரிலிருந்தனர். கலப்பைகள்,

வண்டிகள், பிற மரக்கருவிகள் ஆகியவற்றைத் தச்சர்கள் செய்து தந்தனர். இருப்புக் கருவிகளைக் கருமான்கள் (blacksmiths) உற்பத்தி செய்து தந்தனர். தோலில் வேண்டியவற்றைச் செய்துதரத் தோல் வினைஞர்கள் (cobblers) இருந்தனர்.

விளைபொருள்களை நுகர்பொருள்களாக மாற்றுகின்ற தொழிலாளர்கள் கிராமத்தில் இருந்தனர். எண்ணெய் வித்துக்களைச் செக்குகளில் எண்ணெயாக ஆட்டித்தரு கின்றவர்கள், பருத்தியை நூலாக்கிக் கொடுத்தால் துணியாக மாற்றுகின்ற நெசவாளர்கள், மண்பாண்டங் களைச் செய்கின்ற குயவர்கள், நகைகள் செய்கின்ற பொற் கொல்லர்கள், கட்டடங்களைக் கட்டுபவர்கள் என்று பல்வேறு தொழிலாளர்கள் தொழில்களில் ஈடுபட்டிருந்தனர்.

கிராமமக்களுக்கு வேண்டிய துணிகளைச் சலவை செய் தல், முடி வெட்டுதல், இடுகாட்டைக் காத்தல், மருத்துவம் செய்தல், கோவில்களில் வழிபாடு நடத்துதல் எனப்பல்வேறு பணிகளையும் செய்கின்ற தொழிலாளிகள் இருந்தனர்.

தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்கள் தங்களுக்குரிய கூலியை உணவு தானியமாகவோ, வேறு விளை பொருளாகவோ பெற்றுக்கொண்டனர். பணக்கூலி கொடுக்கும் முறை வரவில்லை.

மொத்தத்தில் கிராமத்தின் தேவைக்குப் போக மிகுதியாக (surplus) இருப்பவற்றை மட்டும் அருகிலுள்ள அங்காடிக்குக் (market) கொண்டு சென்று தேவையான, தங்கள் ஊரில் விளையாத, உற்பத்தி செய்யாத பிற பொருள் களுக்கு மாற்றிக் கொண்டனர். இந் நிலையை 1901 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையில் (census report) ஒவ்வொரு கிராமமும் தொழிலாளர்களுக்கு வேண்டிய எல்லாக் கருவிகளையும், துணைப்பணிகள் செய் கின்ற பொதுப்பணியாளர்களையும் பெற்றிருந்ததுதான் இந்தியக் கிராம வாழ்க்கையின் தனித்தன்மையாகும்.

அண்மைக் காலத்தில் ஆலைத்துணி, மண்ணெண்ணெய், குடைகள் போன்ற மேற்கத்திய பொருள்களைப் பழக்கப் படுத்தியதற்கு முன்பு வரை கிராமம் தற்சார்புடையதாகவும், தனித்து நிற்கக் கூடியதாகவும் இருந்தது. உப்பு, வேறு சில ஆடம்பரப் பொருள்களை மட்டுமே அருகிலுள்ள அங்காடிகளிலோ, பொதிமாடுகளில் விற்பனைக்குக் கொண்டு வரும் நாடோடி வணிகர்களிடமோ பண்டமாற்றாகப் பெற்றுக் கொண்டனர்,'' என்று கூறுகின்றது.

பண்டைய இந்தியக் கிராமங்களின் தன்னிறைவுச் சிறப்பினைப் பற்றிக் கார்ல் மார்க்ஸ் (Karl Marx) தமது புகழ்பெற்ற 'மூலதனம்' (Das Capital) என்னும் நூலில் அருமையாக, ''இன்னும் சிறிய அளவில் இருக்கின்ற பழங்கால இந்தியச் சமுதாயங்கள், இனங்களுக்குப் பொது வாக இருக்கின்ற நிலவுரிமையின் அடிப்படையிலும், நேரடி யாக இணைக்கப்பெற்றிருந்த உழவுத்தொழில்கள், கைத் தொழில்களின் தொடர்பிலும் அமைக்கப்பெற்றுள்ளன. புதிய சமுதாயங்கள் தெளிவான வேலைப்பகுப்புக்களோடு உருவாக்கப் பெறுகின்றன. அவை தன்னிறைவுக்காக உற்பத்தி செய்யும் பல பகுதிகளைக் கொண்டிருக்கின்றன. உற்பத்தி செய்யப் பயன்படுத்துகின்ற நிலம் நூறு ஏக்கரி லிருந்து ஆயிரம் வரை இருக்கின்றது. பெரும்பாலான உற்பத்தி சமுதாயத்தின் உடனடித் தேவைகளைத் தீர்ப்பதற் காகவே செய்யப்படுகின்றது. உற்பத்தி செய்யப்படுபவை எல்லாம் விற்பனைப் பொருள்களல்ல. ஆதலால் உற்பத்தி வேலைப்பிரிவின் தொடர்பின்றி நடக்கின்றது. வேலைப் பிரிவு இந்திய சமுதாயத்தில் பண்டமாற்று முறையைக் கொண்டுவந்திருக்கின்றது......சமுதாயத்தின் பொருளா தார அமைப்பு அரசியலால் விளைந்த புயல்களால் பாதிக்கப் படவில்லை,'' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

**போக்குவரத்து நிலை :**

கிராமங்களுக்கிடையில் சரியான போக்குவரத்துக்கள் இல்லை. நல்ல சாலைகளால் கிராமங்கள் இணைக்கப்படாமல்

இருந்ததால்தான் நீண்டகாலம் கிராமங்களின் தன்னிறைவுத் தன்மையைக் கட்டிக் காக்க முடிந்தது. பொதுவாகக் கரடு முரடான வண்டிப்பாதைகள் மூலம் வண்டிகளிலும், பொதி மாடுகளிலும் அரிதாகவே பொருள்களைக் கொண்டு சென்றனர். பாதைகளில் வழிப்பறிகளும் கொள்ளைகளும் நடை பெற்றதால் போக்குவரத்துக்கள் குறைவாக இருந்தன. பருவமழை தவறிப் பஞ்சம் பட்டினி ஏற்பட்டால் அவற்றின் கொடுமையும் கடுமையும் மிகுதியாக இருந்தது. ஏனென்றால் உரிய காலத்தில் வேண்டிய அளவில் வெளி உதவிகளைப் பெற இயலவில்லை.

பண்டமாற்று :

பணம் புழக்கத்திற்கு வந்திருந்த போதிலும் பண்ட மாற்று முறைதான் அதிக அளவில் நடைமுறையி லிருந்தது. பணி செய்தவர்களுக்கு ஊதியத்தைத் தானிய மாகக் கொடுத்தனர். எல்லா இடத்திலும் ஒரே விலை நிலவியதென்று கூறமுடியாது. தானியத்தையே மதிப் பளவுக் கருவியாகப் பயன்படுத்தினர்.

அலுவலர்கள்:

ஒவ்வொரு கிராமமும் ஓரளவு தன்னாட்சி பெற்ற நிலையில் இருந்தது. ஊரின் நிர்வாகத்தை ஊரிலிருந்த கிராம அலுவலர்களே கவனித்து வந்தனர். ஊர்த் தலைவர் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுதல், வரிகளை வசூலித்தல், நீதிகூறல் ஆகிய பணிகளைச் செய்தார். அவருக்கு உதவியாகக் கணக்குகளைக் கவனிக்க ஒரு கணக்குப் பிள்ளை (கர்ணம், குல்கர்னி) இருந்தார். ஊர்க்காவலுக்குத் தனிக் காவல்காரர் ஒருவரும், செய்திகளைக் கொண்டுவரத் தனியாக ஒருவரும் இருந்தனர். ஒவ்வொரு கிராமத்திலும் அறங்கூறும் பஞ்சாயத்து செயல்பட்டது.

அடுக்குமுறைச் சமுதாயம் :

கிராமம் தன்னிறைவோடு செயல்படும் வகையில் கிராமச்சமுதாயம் அடுக்குமுறையில் அமைந்தது.

மக்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்கின்றவர்கள் வேலையின் அடிப்படையில் தனி இனங்களாகப் பிரிந்து வாழ்ந்தனர். அவர்களைப்பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

முதலாவதாக, சமுதாயத்தின் மேல்நிலையில் உயர் குடியினர் (nobility) இருந்தனர். அரசர்கள், நவாபுக்கள், ஆட்சியாளர்கள், ஜமீன்தார்கள் எனப்பெறும் பெரு நிலக் கிழார்கள் ஆகியோர் இப் பிரிவைச் சேர்ந்தவர்களாவர். நிலமும் அதிகாரமும் இப் பிரிவினருக்குச் சொந்தமாக இருந்தன. பெருநிலக்கிழார்கள் கிராம அதிகாரிகளின் துணையோடு நிலவரியை வாங்கினர். கிராம அதிகாரிகளுக்கு வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் வெவ்வேறு பெயர்கள் வழங்கப்பெற்றன. இவர்கள் வைத்ததே சட்டமாக இருந்தது. கிராமத்தில் இருந்த மற்றைய மக்கள் இவர்களுக்கு ஆட்பட்டு இருந்தனர்.

இரண்டாவதாக, உயர்குடியினருக்கு அடுத்தபடியாகச் சமயப்பணி புரிவோர் இருந்தனர். இவர்கள் பிராமண இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்களைப் பார்ப்பனர் என்றும் கூறுவதுண்டு. இவர்களை இரண்டு இனங்களாகப் பிரிக்க லாம். ஒரு வகையினர் கல்வியறிவு மிக்கவர்கள். இவர்கள் அரசில் உயர் அலுவல்களில் இருந்தனர். அடுத்த பிரிவினர் கல்வியறிவில்லாத பாமர இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் பெரும்பாலும் கோவில்களில் பூசாரிகளாகப் பணி யாற்றினர். பார்ப்பனர்களுக்கு உயர்குடியினர் மானியமாக நிலமும், அன்பளிப்பாகப் பொற்காசுகளும்வழங்கி வந்தனர். கோவிலுக்கு வருகின்றவர்களும் குடிமக்களும் பூசாரிகளுக்குக் காணிக்கை கொடுக்கும் பழக்கம் இருந்தது. காணிக்கையும் அவர்களுக்கு வருவாயாக இருந்தது.

சமுதாயத்தில் மூன்றுவது நிலையில் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தவர்கள் இருந்தனர். வேளாண்மைக் குடியினரை நான்கு உட்பிரிவுகளாகப் பகுக்கலாம். (1) மிகுந்த அளவில் நிலம் பெற்று, கிராம சமுதாயத்தின் தலைமையைப் பெற்றிருந்த பெரு நிலக்கிழார்கள் முதன்மையானவர்கள்.

(2) சமுதாயத்தின் பொது நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டு, ஓரளவு நிலம் உடையவர்களாகப் பயிர்த் தொழிலையும் மேற்பார்த்து வந்தவர்கள் நாட்டாண்மை என்னும் பிரிவைச் சார்ந்தவர்களாவர். (3) சிறு நிலக்கிழார்கள் சிறிதளவு நிலம் பெற்றிருந்தனர். இவர்கள் தங்கள் நிலத்தில் பாடுபட்டதோடு, சிலவேளைகளில் குத்தகையாக நிலம்பெற்றும் உழைத்தனர். (4) நிலமற்ற உழைப்பாளிகள் மற்றவர்களின் நிலத்தில் உழைத்துக் கூலிபெற்று வாழ்ந்தனர். முதல் இரண்டு பிரிவினர்களும் நிலத்தில் இறங்கிப் பணி செய்யவில்லை. நில நிர்வாகம், மேற்பார்வை அவர்களிடமிருந்தது. இறுதி இரண்டு பிரிவினர், ஆண்கள் மட்டுமின்றிப் பெண்களும் உடல் உழைப்பை மேற்கொண்டு வாழ்ந்தனர்.

நான்காவதாக, மக்களுக்கு வேண்டிய பொருள்களைச் செய்து கொடுத்த கைவினைஞர்கள் (artisans) இருந்தனர். பரம்பரையாக இவர்கள் பொருள்களைச் செய்வதில் ஈடுபட்டிருந்ததால் அரிய திறமை பெற்றுத் திகழ்ந்தார்கள். நூற்போர், நெசவாளர்கள், பின்னுபவர்கள், தச்சர், கொல்லர், பொற்கொல்லர், உலோகப் பாண்டங்கள் செய்வோர், சர்க்கரை செய்வோர், குயவர், எண்ணெய் ஆட்டுபவர், தோல் தொழில் செய்வோர், வேறுபல பயன்படு பொருள்களை உற்பத்திசெய்வோர் ஆகியோர் இருந்தனர். இவர்கள் பொதுவாகப் பொதுமக்கள் தேவையென்று கேட்பதைச் செய்து கொடுத்து, தானியமாகக் கூலிபெற்று வாழ்ந்தனர். துணி நெய்வோர், தோலில் பொருள்களைச் செய்வோர், பயிர்த்தொழில்களுக்கு வேண்டிய கருவிகளைச் செய்வோர் ஆகியவர்களிற் சிலர் பொருள்களை உருவாக்கி அருகிலுள்ள அங்காடிகளில் சென்று விற்றனர்.

ஐந்தாவது, பல்வேறு பணிகளைச் (services) செய்வோர் இருந்தனர். இப் பிரிவுக்குள் ஆசிரியர்கள், மருத்துவர்கள், பல் திறத்துக் கலைஞர்கள், மயிர் வினைஞர், துணிகளை வெளுப்போர், சோதிடர்கள், மந்திர வாதிகள்,

வித்தை காட்டுவோர் ஆகியோர் அடங்குவர். இவர்களைச் சமுதாயம் மொத்தமாகப் பேணி வந்தது. குடியானவர்கள் விளைச்சலில் ஒரு பகுதியை இத்தகைய பொதுப்பணிகள் செய்பவர்களுக்காக அளித்தனர்.

ஆருவதாக, சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் தாழ்ந்த பணிகளைச் செய்பவர்கள் வாழ்ந்தனர். இவர்கள் மேட்டுக் குடியினருக்கு வேண்டிய பணிகளைச் செய்தனர். தெருக்களைக் கூட்டுதல், கழிவுப்பொருள்களை அகற்றுதல், கால் நடைகளைப் பராமரித்தல் போன்றவற்றைச் செய்தனர். சில இடங்களில் அடிமைகளும் இருந்தனர். இரவலர்களும் நாடோடிகளும் இப் பிரிவுக்குள் அடங்குவார்கள்.

**மக்களின் வாழ்க்கை முறை :**

மக்கள் சாதிமுறைகளின் அடிப்படையில் பிரிந்து வாழ்ந்தனர். நான்கு வருணங்களாகத் தோன்றிய பிரிவுகள் எண்ணற்ற சாதிகளாக வளர்ந்திருந்தன. சாதிப்பிரிவு பிறப்பால் அமைந்தது. செய்கின்ற தொழில்களுக்கும் சாதிப்பிரிவுகளுக்கும் தொடர்பு இருந்தது. இன்ன சாதியினர் இன்ன தொழில் செய்வதென்ற மரபுகளை உறுதியாகப் பின்பற்றினர். பழக்க வழக்கங்கள் ஆற்றல் மிக்கவையாக இருந்தன.

கிராமம் ஒரு சமுதாயமாக இயங்கியது. சாதி, சமயப் பிரிவுகள் இருந்த போதிலும் கிராம மக்களுக்கிடையில் தாங்கள் ஒன்றென்னும் சமுதாய உணர்வு இருந்தது. ஊர்த்திருவிழாக்களில் எல்லோரும் ஒன்றுபட்டு ஈடு பட்டனர்.

கிராம சமுதாயத்தின் அலகாகக் குடும்பம் அமைந் திருந்தது. கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையில் குடும் பத்தில் உள்ளவர்கள் எல்லாம் கூட்டுறவின் அடிப்படையில் உழைத்து வாழ்ந்தனர். குடும்பங்களில் மணவினை போன்று பல்வேறு சடங்குகளுக்காக ஆடம்பரமாகச் செலவிட்டனர்.

பொதுப் பொருளாதார நிலை :

தன்னிறைவு பெற்ற அன்றைய கிராமத்தின் செல்வ வளம் உயர்குடிகளின் கையில் குவிந்திருந்தது. அவர்கள் மிகப்பெரிய இல்லங்களில் ஆடம்பரமாக வாழ்ந்தனர். அவர்களுக்கும் மற்றைய மக்களுக்கும் இடையில் வருவாயிலும் வாழ்க்கைத்தரத்திலும் மிகுதியாக ஏற்றத்தாழ்வு இருந்தது.

பெரும்பாலான மக்கள் மண்குடிசைகளில் வாழ்ந்தனர். கூரை வேய்ந்த வீடுகள் வெய்யிலுக்கும், மழைக்கும் பாது காப்பற்றவையாக இருந்தன. குறிப்பாகத் தாழ்ந்த நிலையில் இருந்த மக்கள் குடியிருக்கச் சரியான இடமின்றி, உடுக்கத் தக்க உடையின்றி, உண்ணப் போதுமான உணவின்றி வறுமையில் வாடினர்.

வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் இருந்த கிராமங்களுக்கிடையில் சின்னஞ்சிறு வேறுபாடுகள் இருந்தாலும் மொத்தத்தில் பொதுவான இயல்புகள் ஒன்று போலவே இருந்தன. சமுதாயப் பழக்க வழக்கங்கள் மாறு பட்ட போதிலும், பொருளாதார அமைப்பு முறையும், இயக்கமும் ஏறத்தாழ ஒன்றாகவே காணப்பெற்றன. ஆதலால் கிராமப் பொருளாதாரத்தின் பின்புலத்தில் பிற பொருளாதாரக் கூறுகளையும் அறிந்துகொள்ளலாம்.

# 3. நிலவுடைமையின் இயல்பும் விளைவும்

பதினெட்டாம் நூற்றாண்டின் இந்தியப் பொருளாதாரம் கிராமப் பொருளாதார வடிவில் வேளாண்மை என்னும் அச்சாணியைச் சுற்றிச் சுழன்றது. வேளாண்மைக்கு உயிர் நாடி நிலம். நில உரிமை உடையவர்கள் மிகுதியாக வருவாயைப் பெற்றார்கள். அவர்களுக்குச் சமுதாயத்தில் பெரும் செல்வாக்கு இருந்தது. ஆதலால்தான் வேளாண்மைப் பொருளாதாரத்தில் அடிப்படையாக விளங்கிய நிலவுடைமை பற்றி விரிவாக அறிந்துகொள்ளுதல் தேவையாகின்றது.

**பண்டைக் காலம் :**

மேலை நாடுகளில் நிலவுடைமை தனியார் சொத்துரிமையாக வளர்ந்ததைப் போல, பண்டைக்காலத்தில் நமது நாட்டில் நிலவுரிமை அமையவில்லை. நிலத்தை மன்னனுக்குரியதாகக் கருதிய போதிலும் மக்கள் எந்த நிலத்தையும் சாகுபடி செய்யும் உரிமை பெற்றிருந்தனர். இத்தகைய நிலையில் திருவள்ளுவர்,

> "இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும்"

என்று கூறிய கருத்து நடைமுறையிலிருந்தது.

நீண்ட நெடுங்காலமாக இங்கிருந்த நிலையை, வீரா ஆன்ஸ்டி, "பழங்காலத்தில் நிலத்தின்மீது முற்றுரிமை பெற்றிருக்குங் கருத்து இந்தியாவில் நிலவவில்லை. உண்மையில் நிலவியிருந்தவை, உழவனுக்குப் பயிரிடும் உரிமையும், அவ் வுரிமை நிலைபேறுக்கப் பெற்றிருந்தமையுமே," என்று கூறுகின்றார்.

நாட்டில் ஏற்பட்ட சமுதாய அரசியல் மாற்றங்களுக்கேற்ப நில உடைமை முறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்ட வழிமுறையினை வரலாற்று ஆசிரியர்கள் விளக்குகின்றனர்.

சமுதாய உடைமை:

பழங்காலத்தில் நிலம் சமுதாய உடைமையாக இருந்தது. இதுதான் நில உடைமையின் முதல் நிலை என்று கூறலாம். அர்த்த சாத்திரம் எழுதிய சாணக்கியர் அவர் காலத்தில் இருந்த நிலத்தை இரு வகைகளாகப் பிரித்துக் கூறுகின்றார். ஒன்று, மன்னனுக்குச் சொந்தமான நிலம். மற்றொன்று உழுபவர்களுக்குச் சொந்தமான நிலம்.

நாட்டின் நிலமெல்லாம் மன்னனுக்குரியதென்று ஏற்றுக்கொண்டனர். ஆனால், அந்த நிலத்தைப் பயிரிடும் உரிமை மக்களுக்கு இருந்தது. இந்த உரிமையைச் சமுதாய மக்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டனர். ஓர் ஊரைச் சுற்றி இருக்கும் நிலத்தை எல்லாம் அந்த ஊருக்குச் சொந்தமானதாகக் கருதினர். அந்தக் கிராம சமுதாயம் நிலத்தை ஊரிலுள்ள மக்களுக்குச் சாகுபடி செய்வதற்காகப் பகிர்ந்தளித்தது. இத்தகைய நிலப் பங்கீடு நிலையானதாக இல்லை. கால இடை வெளியில் நிலத்தை மறு பங்கீடு செய்தனர். இதனால் வளமான நிலம் எல்லோருக்கும் கிடைக்கும் வாய்ப்பு இருந்தது. இத்தகைய நிலப்பங்கீடு அன்றைய சமுதாய அறத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது.

நிலத்தைப் பயன்படுத்துவதற்காக விளைச்சலில் ஒரு பகுதியை மன்னனுக்கு வரியாகக் கொடுத்தனர். கிராம சமுதாயம் இத்தகைய வரியை உழுது பயிரிடுகின்றவர்களிடம் பெற்று மன்னனுக்கு மொத்தமாகச் செலுத்தியது.

நிலம் கிராமத்திற்குச் சொந்தமாகக் கருதப்பெற்றது நெடுங்காலத்திற்கு முந்திய பண்டைய நிலையாகும். அக்

காலத்தில் புதிது புதிதாகக் கிராமங்கள் உருவாயின. மக்கள் தொகை குறைவு. நிலம் ஏராளமாக இருந்தது. நிலத்தை வாங்கி விற்கும் வழக்கம் வரவில்லை. பயிர்த் தொழில் செய்ய விரும்பியவர்களுக்கெல்லாம் நிலம் கிடைத்தது. இந்த முதல் நிலையில் நிலஉடைமை உணர்வு தனிமனிதர்களுக்கு வரவில்லை என்பது குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

குடும்ப உடைமை முறை:

நிலத்தை முழுவதும் சமுதாய உடைமையாகக் கருதி, கால இடை வெளியில் மறு பங்கீடு செய்யும் பழைய முறையில் ஓர் அடிப்படைக் குறையினைக் கண்டனர். சில உழவர்கள் தங்களுக்குக் கிடைத்த நிலத்தை நன்கு பண்படுத்தி, உரமிட்டு வளப்படுத்தி மிகுதியாக விளைகின்ற நிலமாக மாற்றியிருந்தனர். தங்களுடைய உழைப்பால் உருவான நிலத்தை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்க மனம் வரவில்லை. சமுதாய உணர்வை விடக் குடும்ப உணர்வு தலைதூக்கி வலிமை பெற்றது. தங்களுக்குப் பிறகும் தங்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கே அந் நிலம் உரிமையுடையதாக இருக்க வேண்டுமென்று கருதினர். இக் கருத்து வலிமை பெற்றபொழுது நிலத்தைக் குடும்பச் சொத்தாகக் கருதினர். இது நில உடைமையில் இரண்டாம் நிலையாகும்.

தொடக்க காலத்தில் குடும்ப உடைமையாக இருந்த சொத்தை விற்பனை செய்வதைச் சமுதாயம் ஏற்கவில்லை. ஒருவரின் நிலம் அவருக்குப் பிறகு அவருடைய பிள்ளைகளுக்கு (வாரிசுதாரர்களுக்கு)ச் சொந்தமானது. ஒருவருக்குப் பிள்ளைகள் இல்லையென்றால், அவருடைய காலத்திற்குப்பிறகு அவருடைய நெருங்கிய உறவினர்கள் அந் நிலத்தைச் சாகுபடி செய்யும் உரிமையைப் பெற்றனர்.

நிலம் நிலையான குடும்ப உடைமையாக மாறியவுடன் அதனை வெறும் உற்பத்திக்காரணியாக மட்டும் கருதாமல்

நிலத்தைச் சொத்தாக—செல்வமாக மதிக்கத் தொடங்கினர். காலப்போக்கில் ஒருவர் நிலத்தை மற்றவர் குத்தகைக்குப் பெற்றுச் சாகுபடி செய்யும் வழக்கம் வந்தது. மக்கள் தொகை பெருகப் பெருக, நிலம் ஒரு பற்றுக்குறையுள்ள உற்பத்திக்காரணியாக மாறியது. இதனால் நிலத்தின் மதிப்பு படிப்படியாக உயர்ந்தது.

## தனியாள் நில உடைமை :

குடும்ப உடைமையாக இருந்த நிலம் தனியாள் நில உடைமையாக மாறியது நில உடைமையில் மூன்றும் நிலையாகும். காலப்போக்கில் குடும்பத்தின் மொத்தச் சொத்தாக இருந்த நிலத்தைத் தனிமனிதர்களின் உடைமையாக மாற்றும் சூழ்நிலை உருவானது. பொருளாதாரத்தில் பணத்தின் செல்வாக்கு உயர்ந்த பொழுது நிலத்தையும் ஒரு பொருளாக வாங்கி விற்கத் தொடங்கினர். குடும்பத்தின் பரம்பரைச் சொத்தாகத் தொடர்ந்து வந்த நிலம், ஒருவர் கையிலிருந்து மற்றவருக்கு மாறியது. குடும்பத்தின் கூட்டு உணர்வை விடத் தனிமனித உணர்வு மேலோங்கிய காலத்தில் நிலத்தைத் தனியார் உடைமையாக அரசும் ஏற்றுக்கொண்டது.

## நிலக்கிழார்களின் பெருக்கம் :

இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்னால் முகமதியர்களின் ஆட்சிக்காலத்திலேயே நிலவுடைமை முறை உறுதியான அடிப்படையில் அமைந்துவிட்டது. தனியாக நிலத்தைப் பெற்றிருந்த நிலக்கிழார்களின் எண்ணிக்கை மிகவும் வளர்ந்தது. இதற்கான தலையாய காரணங்களைத் தொகுத்துக் கூறலாம்.

முதலாவதாக, இந்து மன்னர்களும், முகமதிய மன்னர்களும் போர்களாலும், பிற காரணங்களினாலும் சிதறுண்ட காலத்தில், சீர்குலைந்த மன்னர் குடும்பங்கள் தங்களுக்கெனச் சொந்தமாக முடிந்த அளவு நிலத்தை

உரிமை கொண்டாடின. இதனல் சில இடங்களில் பெரிய பண்ணைகள் உருவாயின. இத்தகைய பண்ணைகளும் காலப்போக்கில் பிரிந்து பல உடைமைகளாக மாறின. மிகுதியாக நிலத்தைக் கட்டிக் காத்துக்கொண்டவர்கள், பெரும் நிலக்கிழார்களாகச் சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர்.

இரண்டாவதாக, மன்னன் விரும்பியவர்களுக்கு மானியமாக நிலத்தை வழங்கும் பழக்கம் நீண்ட காலமாக நமது நாட்டில் இருந்தது. அரிய செயல் புரிந்தவர்களுக்கும், நாட்டுப் பணிக்காகத் தங்களை ஒப்படைத்தவர்களுக்கும், பெரும் புலவர்களுக்கும், அமைச்சர்கள் போன்றவர்களுக்கும் இத்தகைய நிலமானியங்கள் கிடைத்தன. மானியமாக நிலத்தைப் பெற்றவர்களும் அவர்களது பரம்பரையினரும் நிலக்கிழார்களாக விளங்கினர்.

மூன்ருவதாக, மன்னர்களின் ஆட்சி மாறிய போதும், நாட்டில் குழப்பங்கள் மலிந்த போதும், வலிமை மிக்க அரசின் அலுவலர்கள் பொது நிலங்களையும், உரிமையற்றுக் கிடந்த நிலங்களையும் தங்களுக்கென வளைத்துப் போட்டுக் கொண்டனர். இப்படிப்பட்டவர்களும் பிற்காலத்தில் பெரும் நிலக்கிழார்களாகச் செல்வாக்கும் சொல்வாக்கும் பெற்று வாழ்ந்தனர்.

நான்காவதாக, வாணிபத்தில் பொருளீட்டியவர்கள் அதனை நிலத்தில் முதலீடு செய்தனர். நிலத்தின் மதிப்புக் கூடியதாலும், நிலத்திலிருந்து குத்தகை வாரம் என்னும் வருவாய் கிடைத்ததாலும் நிலத்தை நிலையான சொத்தாகக் கருதி வாங்கினர். இதனல் நிலக்கிழார்களின் எண்ணிக்கை உயர்ந்தது.

ஐந்தாவதாக, தந்தையின் சொத்தை ஆண்பிள்ளைகள் அனைவரும் பங்கிட்டுக் கொள்ளும் மரபு நெடுங்காலத்திற்கு முன்பே தொடங்கிவிட்டது. இதனல் நிலக்கிழார்களின்

பெரும் பண்ணைகள் கூறுபோடப் பெற்று, சிறு நிலக்கிழார்கள் பெருகுகின்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

**இரு வகைக் கிராமங்கள் :**

நிலவுடைமையின் அடிப்படையில் அப்பொழுதிருந்த கிராமங்களை இருவகைகளாகப் பிரிக்கலாம். ஒருவகைக் கிராமத்தை 'உழவர் கிராமம்' என்றும் மற்ருெரு வகைக் கிராமத்தைக் 'கூட்டுக்கிராமம்' என்றும் கூறலாம். இரு வகைக் கிராமங்களிலும் வாழ்க்கை முறை ஒன்று போல இருந்தது. ஆனுல், நில உடைமையிலும், உரிமையிலும் அடிப்படையிலேயே வேறுபாடுகள் இருந்தன.

(1) உழவர்கள் கிராமம் (ryotwari village)

'ரையத்' என்னும் சொல்லுக்கு 'உழவர்கள்' என்று பொருள். உழவர்கள் வாழ்ந்த கிராமத்தை 'ரையத்வாரிக் கிராமம்' என்று குறிப்பிட்டனர்.

உழவர்கள் கிராமத்திலிருந்த நிலம் இருவகைப்படும். ஒன்று, உழவர்களுக்குச் சொந்தமான நிலம் மற்ருென்று அரசுக்குச் சொந்தமான, அல்லது பொதுவான நிலம்.

பயிர் செய்யப்பெற்ற நிலம் எல்லாம், உழவர்களுக்கே சொந்தமாக இருந்தது அவர்கள் தங்களது விருப்பம் போல் நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை பெற்றிருந்தனர்; அவர்கள் அரசனுக்கு நிலவரி செலுத்தினர். நிலவரியை வசூலித்து அரசுக்குச் செலுத்தத் தனி அலுவலர்கள் இருந்தனர்.

மேய்ச்சல் நிலம் இடுகாடு, குளங்கள், ஏரிகள், புறம்போக்கு நிலம் ஆகியவை எல்லாம் அரசுக்குச் சொந்தமாக இருந்தன. இவற்றை உழவர்கள் மொத்தமாகப் பயன்படுத்தினர்.

உழவர்களின் வாழ்க்கை எளிமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. ஆண்களும் பெண்களும் தங்கள் நிலங்களில் பாடுபட்டனர். ஊரிலுள்ள கைவினைஞர்கள் அவர்களுடைய கூட்டுறவான பணிகளின் மூலம் உழவுத் தொழில் நன்கு நடைபெறத் துணை செய்தனர். உழவர்கள் விளைச்சலில் ஒரு பகுதியைக் கைவினைஞர்களுக்குக் கொடுத்தனர். எச்சமாக உள்ள விளைபொருளை வைத்துக்கொண்டு வாழ்ந்தனர்.

உழவர் கிராமங்களில் சிறு வணிகர்கள் கடைகளை வைத்து நடத்தினர். அவர்களிடம் தங்கள் ஊரில் கிடைக்காத உப்பு போன்ற பொருள்களை வாங்கினர். வணிகர்கள் உழவர்களுக்கு வட்டிக்குக் கடன் கொடுத்தனர்.

ஊரில் வந்த வழக்குகளைக் கிராமத்திலுள்ள அறங்கூறும் பஞ்சாயத்து விசாரித்துத் தீர்ப்புக் கூறியது.

மொத்தத்தில் மக்கள் ஊருக்கு வெளியில் செல்ல வேண்டிய தேவை குறைவாக இருந்தது. பொதுவாக அருகிலுள்ள வார அங்காடிகள், கோவில் திருவிழாக்கள் போன்றவற்றில் பங்கு பெறுவதற்காக மட்டுந்தான் மக்கள் வெளியூர்களுக்குச் சென்றனர்.

## (2) கூட்டுக் கிராமம் (joint village)

கூட்டுக் கிராமம் என்பதை நிலக்கிழார் கிராமம் என்றும் கூறலாம். இக் கிராமத்து நிலம் ஒரு சில நிலக்கிழார்களின் கூட்டுச் சொத்துடைமையாக இருந்தது. உழவர்களுக்கு நிலத்தில் சாகுபடி செய்யும் உரிமை மட்டும் இருந்தது. அவர்கள் விளைச்சலில் ஒரு பகுதியை நிலக்கிழார்களுக்குக் கொடுக்க வேண்டும். அரசனுக்கு நிலவரி செலுத்துவது நிலக்கிழார்களின் கூட்டுப் பொறுப்பாகும்.

இத்தகைய கிராமங்களில் நிலத்தை விற்பனை செய்யும் வழக்கமில்லை. ஆதலால் பரம்பரையாக நிலஉரிமை ஒரு சில குடும்பங்களின் கையிலேயே இருந்தது.

ஊரின் நிர்வாகத்தை ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட பஞ்சாயத்து கவனித்தது. ஒவ்வோர் ஊரிலும் சில அரசு அலுவலர்கள் இருந்தனர்.

மொத்தத்தில் கிராமவாழ்க்கை மிகுதியான சிக்கலின்றி அமைதியான நீரோடை போல இருந்தது.

**மாற்றம் :**

ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்ஞல் இந்தியாவில் இருந்த நிலவுடைமை முறை மிகுந்த நெகிழ்ச்சியுடையதாகும். நாடு முழுவதும் ஒரே வகையான நிலவுடைமை, நில உரிமை முறைகள் இருக்கவில்லை. இடத்திற்கு இடம், மரபுகளின் அடிப்படையில் இவை மாறுபட்டன.

ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் நமது நாட்டில் பரவி-நிலைபெற்ற பொழுது நிலவுடைமை முறை பெரிய மாற்றத்திற்குள்ளானது. அதனைப் பின்ஞல் ஆங்கிலேயர்களின் வருகையை ஒட்டிய விளைவுகளைப் பயில்கின்ற பொழுது விளக்கலாம்.

# 4. சிறுதொழில்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்

ஆங்கிலேயர்களின் வருகைக்கு முன்னுல் இந்தியாவில் கைத்தொழில்கள் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தன. இன்று பெருந்தொழில்களின் கோட்டைகளாக விளங்கு கின்ற ஐரோப்பிய நாடுகள் காட்டுமிராண்டி நிலையில் தேவையான பொருள்களையே உற்பத்திசெய்யத் தெரியாத நிலையில் இருந்தபோது, இந்தியாவில் சிறுதொழில்கள் செழித்து வளர்ந்திருந்தன. பதின்மூன்ரும் நூற்ருண்டின் இறுதியில் இந்தியாவிற்கு வருகைதந்த மார்கோபோலோ (MarcoPolo) இங்குத் தொழில்கள் வளம் பெற்றிருந்ததைச் சிறப்பித்துக் கூறுகின்ருர்.

திறமைமிக்க கைத்தொழில் வினைஞர்கள் தங்களின் அரிய படைப்புக்களின் மூலம் உலகப் புகழைப் பெற்றிருந் தனர். அவர்கள் நமது நாட்டு மக்களுக்கு வேண்டிய பொருள்களை மட்டுமின்றி, ஏற்றுமதி செய்யக்கூடிய வகை யிலும், அளவிலும் பயன்படும், கலைத்திறனுடைய பொருள் களை உற்பத்தி செய்தனர். 1833 ஆம் ஆண்டில் சர் தாமஸ் மன்ரோ இந்தியப் பொருள்கள் தரமாகவும், தன்னிறைவு அளவிலும் இருந்ததைப் போற்றிக் கூறியுள்ளார். இங்கு வான்புகழ் பெற்றிருந்த சில தொழில்களைப் பற்றிக் குறிப் பிட்டுக் கூறலாம்.

துணித் தொழில் :

கைத்தொழிலாக வளர்ந்திருந்த துணித் தொழில் இந்தியாவெங்கும் பரவிச் செழித்திருந்தது. நேர்த்தியாகவும் நுண்ணியதாகவும் இருந்த டாக்கா மஸ்லின் (Muslin of Dacca) துணி உலகப் புகழ் பெற்றிருந்தது. மஸ்லீன் துணியின் நுண்ணிய தன்மைபற்றி வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஔரங்கசீப்பின் அவைக்களத்திற்குள் ஒரு முறை அவர் மகள் நுழைந்த பொழுது, அவள் தக்க ஆடையின்றி இருப்பதாக எண்ணி ஔரங்கசீப் ஆத்திரப்பட்டாராம். பின்புதான், அவள் டாக்கா மஸ்லின் துணியை ஏழு சுற்று சுற்றிக் கட்டிக்கொண்டு வந்திருப்பதை அறிந்தாராம்.

மான்செஸ்டரைச் சேர்ந்த ஒரு துணி உற்பத்தியாளர் மஸ்லின் துணிபோல உற்பத்தி செய்ய முயன்றுர். இயலாத நிலையில், "இது பொருளின் நிழல் போல (shadow of a commodity) இருக்கின்றது," என்று கூறினாராம்.

டாக்டர் டி. என். முகர்ஜி (Dr. T N Mukerjee) அவரது "1883இல் இந்தியப் பொருள்கள் பற்றிய கையேடு" (A Handbook of Indian Products, 1883) என்னும் நூலில், "20 கஜ நீளமும், ஒரு கஜ, அகலமும் உள்ள நேர்த்தியான மஸ்லின் துணியை ஒரு மோதிரத்திற்குள் நுழைத்துவிட இயலும். அதனை உற்பத்தி செய்ய ஆறுமாதம் தேவையாகும்" என்று எழுதியுள்ளார்.

மஸ்லின் துணியோடு கூட நேர்த்தியும் கவர்ச்சியும் மிக்க துணிகளை உற்பத்தி செய்வதில் பல இடங்கள் பெருமை பெற்று விளங்கின. லக்னோ வண்ணச் சீட்டித் துணிகளுக்காகவும் (chintzes), அகமதாபாத் சிறந்த வேட்டிகளுக்காகவும், மதுரை சரிகை இழைத்த கண்கவர் துணிகளுக்காகவும், நாக்பூர் பளபளப்பான பட்டுக்கரையிட்ட துணிகளுக்காகவும் தனிப்பெயர் கொண்டிருந்தன. வடக்கில் காசி, முசிதாபாத், அகமதாபாத் போன்ற இடங்களும் தெற்கில் பூனு, காஞ்சி போன்ற இடங்களும் பட்டு உற்பத்தியில் முன்னேடியாகத் திகழ்ந்தன.

காசுமீர் கம்பளிக்கு உலகெங்கும் அதிக விலைமதிப்பு இருந்தது. கம்பளித் துணியின் மூல இடம் காசுமீர் தான். 1830 இல் காசுமீரில் பஞ்சம் ஏற்பட்ட பொழுது கம்பளி நெசவாளர்கள் வேறு இடங்களுக்குக் குடியேறினர்.

இதனுல் அமிர்தசரசிலும் பஞ்சாப்பில் பல நகரங்களிலும் கம்பளி நெசவு வளர்ந்தது. பிரெஞ்சு வணிகர்கள் முன் பணம் கொடுத்து, கம்பளியை நெசவு செய்யும்படி கூறி, அதனை வாங்கி ஏற்றுமதி செய்தனர்.

### உலோகத் தொழில்கள் (metal works) :

துணித்தொழிலுக்கு அடுத்தபடியாகச் செம்பு, பித்தளை ஆகிய உலோகங்களில் பாத்திர பண்டங்கள் செய்கின்ற தொழில் சிறப்புற்றிருந்தது. காசி, பூனு, ஐதராபாத், விசாகப்பட்டினம், தஞ்சாவூர் ஆகிய இடங்கள் பித்தளை, செப்புப் பாத்திரங்கள் செய்வதில் பெயர் பெற்றிருந்தன. பாத்திரங்களைக் கலையழகோடு செய்தனர்.

தங்கம், வெள்ளி ஆகியவற்ருல் அணிகலன்களைச் செய்கின்ற தொழிலும் மேலோங்கியிருந்தது. நுண்ணிய வேலைப்பாடமைந்த நகைகளை உருவாக்குவதில் வல்ல தொழில் நுட்பக் கைவினைஞர்கள் நாடெங்கும் இருந்தனர்.

### மரம், கல் வேலைகள் :

மரத்திலும், கல்லிலும் கலைப்பொருள்களைப் படைக்கின்ற கலைஞர்கள் சில பகுதிகளில் வாழ்ந்துவந்தனர். மைசூரில் மரத்தில் பல பொருள்களைப் படைத்தனர். மரத்தை இழைத்து எழில்மிக்க உருவங்களைச் செய்தனர். மரத்தில் வண்ண ஓவியங்களைத் தீட்டுகின்ற திறன்மிக்கவர்கள் இருந்தனர். ஆக்ரா, பளிங்குக் கல்லில் நுண்கலைப் பொருள்களைப் படைப்பதில் செல்வாக்குப்பெற்றிருந்தது.

### போர்க்கருவிகள் செய்தல் :

இரும்பில் இணையற்ற போர்க்கருவிகளை வடிக்கும் தொழில் நீண்டகாலமாக வளர்ந்தோங்கியிருந்தது. சியால்கோட், லாகூர் ஆகிய இடங்களில் செய்த போர்க் கருவிகளை நாடெங்கிலும் விரும்பி, நல்ல விலை கொடுத்து வாங்கினர்.

**தொழிற் குழுக்கள் (guilds) :**

பண்டைய இந்தியப் பொருளாதார வரலாற்றில் தனிச் சிறப்புப் பெற்றதாக இருப்பது இங்கு அமைந்திருந்த தொழில் குழுக்களாகும். அன்றிருந்த தொழில் பகுப்பினடிப் படையில் ஒரு தொழிலை ஒரு சாதியினர் செய்து வந்தனர். ஆனால் நூற்பு, நெசவு போன்ற தொழில்களை எல்லாச் சாதியினரும் செய்கின்ற நிலை காலப்போக்கில் ஏற்பட்டது. இந்நிலையில் ஒரு தொழிலில் ஈடுபட்டவர்கள் தங்களது வினைமுடிந்த பொருள்களை விற்பனை செய்யவும், தொழிலை நெறிப்படுத்தவும் தங்களுக்குள் தொழிற் குழுக்களை அமைத்துக்கொண்டனர்.

தொழிற் குழுக்களைச் சில தலைவர்களடங்கிய உட்குழு நிர்வகித்தது. திறமையற்றவர்களைத் தொழிலுக்குள் நுழைய விடுவதில்லை. செய்பொருள்களின் தரத்தை நிலைநாட்டி, தங்களது நற்பெயரைக் கட்டிக்காப்பதில் கண்ணும் கருத்து மாக இருந்தனர்.

தொழிற் குழுக்கள் பொதுநிதியை உருவாக்கி வைத் திருந்தன. பஞ்சம், பட்டினி ஏற்படுகின்ற பொழுது பொது நிதியிலிருந்து உதவி செய்தனர். தொழிற்குழுக்கள் கோவில்கள், பள்ளிகள்கட்டுதல், திருவிழாக்கள் நடத்துதல் ஆகிய சமுதாயப் பணிகளையும் மேற்கொண்டன.

**சிறு தொழில்களின் சீர்குலைவு:**

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வந்து, வாணிபத்தைக் கைப்பற்றிய பிறகு இந்தியக் கைத்தொழில்களின் பொற்காலம் மங்கத் தொடங் கியது. சிறுதொழில்களின் சீரழிவுக்கான காரணங்களைத் தொகுத்துக் கூறலாம்.

**1. இந்திய அரசர்களின் ஆதரவு குறைதல் :**

இந்திய அரச குடும்பங்களின், உயர்குடி மக்களின் ஆதரவில் கலைநுட்பக் கைத்தொழில்கள் செழித்திருந்தன.

மன்னர் குடும்பங்கள் சிதைந்து, அழிந்த பொழுது டாக்கா மஸ்லின், காசுமீர் சால்வை போன்றவற்றிற்கான தேவை குறைந்தது. வெளிநாட்டினர் தொடக்கத்தில் கைத் தொழிற் பொருள்களே வாங்கி ஆதரவு கொடுத்தனர். ஆனல், காலப்போக்கில் அவர்களுடைய ஆதரவுகுறைந்தது. இதனல் சிறு தொழில்கள் நிலே தடுமாறின.

## 2. ஆங்கிலேயர்களின் வாணிபக் கொள்கை :

ஆங்கிலேயர்களின் வாணிபக் கொள்கை இந்தியக் கைத்தொழில்களேப் பாதித்தது. இந்தியாவிலிருந்து வண்ணத் துணிகளே இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்வதைத் தடுத்தனர். இந்தியப் பொருள்களின்மீது நிறைய வரி விதித்தனர். இவை எல்லாம் சிறு தொழில்களின் பொருள் களுக்கிருந்த அங்காடியைப் பாதித்தன.

## 3. எந்திரப் பொருள்களின் போட்டி:

இங்கிலாந்தில் தொழிற்புரட்சி ஏற்பட்ட பிறகு, எந்தி ரங்களின் துணேயால் பொருள்களேச் செய்து மலேயெனக் குவித்தனர். அவற்றை இந்தியாவிற்குக் கொண்டுவந்து மலிவு விலேக்கு விற்றனர். அவற்ருேடு இந்தியக் கைத் தொழில் பொருள்களால் போட்டியிட இயலவில்லே.

## 4. மூலப் பொருள்களின் பற்ருக்குறை:

கிழக்கிந்திய நிறுவனம் இந்தியாவிலிருந்து பருத்தி போன்ற மூலப்பொருள்களே இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்தது. போதுமான அளவில் மூலப்பொருள்கள் கிடைக் காததாலும் நமது நாட்டுத் தொழில்கள் வாடத் தொடங்கின.

## 5. தரம் குறைதல் :

ஆங்கிலேயர்களின் வாணிபம் இந்தியாவில் வேரூன்றிப் பரவியபொழுது, இங்கிருந்த தொழிற் குழுக்கள் (guilds) ஆற்றலற்றுப் போயின. ஆதலால் பொருள்களின்

தரத்தை நிலைநாட்டும் கட்டுப்பாடு குறைந்தது. மேலும், ஆங்கிலேய வணிகர்கள் அவர்களுடைய பொருள்களைப் போல நம்முடைய கைவினைஞர்களையும் உற்பத்தி செய்யத் தூண்டினர். இதனால் இங்குள்ள கைவினைஞர்களின் மூலத்திறன் மங்கியது. மேற்கத்திய பொருள்களைப்போல உற்பத்திசெய்ததில் தரம் குறைந்தது. இந்தியப் பொருள்கள் எஞ்சியிருந்த அங்காடியையும் இழக்கும் நிலைஏற்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

**6. போர்க் கருவிகளை உற்பத்தி செய்யத் தடை :**

ஆங்கிலேயர்கள் கருவிகளின் சட்டத்தின்படி (arms act) இந்தியர்கள் போர்க்கருவிகளை வைத்துக் கொள்வதற்குத் தடை விதித்தனர். இதனால் வடமேற்கு இந்தியா, கச்சு (cutch) சிந்து, பஞ்சாப் ஆகிய பகுதிகளில் நன்கு வளர்ந்திருந்த உலோகங்களில் கருவிகளைச் செய்கின்ற தொழில்கள் எல்லாம் நலிந்தன.

**7. மேற்கத்திய நாகரிக வளர்ச்சி :**

இந்திய உயர்குடியினரும், கற்றவர்களும், ஆட்சியாளர்களும் போட்டி போட்டுக் கொண்டு ஆங்கிலேய நாகரிகத்தைத் தழுவினர். அவர்கள் பயன்படுத்தும் பொருள்களைப் பயன்படுத்தவும், அவர்களைப்போல் உடையணியவும் தொடங்கினர். இந்தப் போலி நாகரிகப் போக்கால் இந்தியப் பொருள்களுக்குரிய தேவை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தது.

**விளைவுகள் :**

இந்தியத் தொழில்களின் சீர்குலைவால் இந்தியப் பொருளாதாரத்தின் தனித்தன்மை அழிந்தது. முதலாவதாக, கிராமங்கள் தன்னிறைவு பெற்றிருந்த நிலை

போயிற்று. வெளி இடங்களைச் சார்ந்து கிராமங்கள் இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

இரண்டாவதாக, வேலையற்ற கைவினைஞர்கள் வேறு வழியின்றி வேளாண்மையில் ஈடுபட்டனர். நிலமற்றவர் களின் எண்ணிக்கை கூடியது. வேளாண்மையில் ஆண்டு முழுவதும் வேலை இல்லை. இதனால் வறுமை கூடியது.

மூன்றாவதாக, கிராமங்களிலிருந்த செல்வம் வெளி யேறத் தொடங்கியது. ஆங்கிலேயர்கள் புகுத்திய பணப் பொருளாதாரம் கிராமங்களைச் சுரண்ட வழிவகுத்தது.

# 5. பண்டைய கடன் முறை

அன்றும் இன்றும் இந்தியக் கிராமப் பொருளாதாரத்தில் தொடர்கின்ற சிக்கலானது உழவர்கள் பட்டிருக்கும் கடனும் அதன் வளர்கின்ற சுமையுமாகும். பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் கடனைப் பொருள்வடிவத்தில் பெற்றுப் பொருள்வடிவிலேயே திருப்பிக் கொடுத்தனர். ஆதலால் பெற்ற கடன் பெருகிப் பெருஞ்சுமையாகும் நிலை இருக்கவில்லை.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களின் வாணிபம் பெருகியதனால், கைத்தொழில்கள் தேய்ந்து கொண்டிருந்தன. அதனால் பணப்பொருளாதார நிலையில் உழவர்களின் கடனின் அளவு கூடியது. உழவர்களால் கடனைத் தீர்க்க முடியாததனால் 'வட்டி குட்டி போட,' அறியாமையில் உழன்ற உழவர்களைக் கடன் கொடுத்தவர்கள் ஏமாற்ற, கிராமக் கடன் ஒரு தொடர் கதையாயிற்று.

கடன் கொடுப்போர் (money lenders):

கிராமங்களில் கடன் கொடுப்பவர்கள் (லேவாதேவிக்காரர்கள்) நீண்ட காலமாகவே கடன் கொடுப்பதைத் தொழிலாகச் செய்து வந்தனர். ஒவ்வொரு பகுதியிலும் ஒரு குறிப்பிட்ட சாதியினர் கடன் கொடுக்கும் தொழிலை மேற்கொண்டிருந்தனர்.

கடன் கொடுத்தவர்கள் நிறைய வட்டி வாங்கினர். வட்டி விகிதம் 18 (சதவீதம்) விழுக்காடு முதல் 100 விழுக்காடு வரை இருந்ததாகக் கடன் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் கூறுகின்றன. "கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்," என்று கவிஞர் கூறுவதிலிருந்து, ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பே கடன்

ஒரு தீர்க்க முடியாத சிக்கலாகி இருந்தது தெரிகின்றது. ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பிறகு, கிழக்கிந்திய நிறுவனத்தின் பிடிக்குள் இந்தியப் பொருளாதாரம் சிக்கித் தவித்த காலத்தில் இந்திய உழவர்களின் கடன் அளவாலும் வகைகளாலும் விரைந்து வளர்ந்தது.

கடன் பெருகக் காரணங்கள் :

உழவர்களின் கடனின் அளவு ஆண்டுக்கு ஆண்டு பெருகியதற்கான காரணங்களைத் தொகுத்துக் கூறலாம்.

1. வறுமை நிலை :

இந்திய உழவர்களிடமிருந்த வறுமை பரம்பரையாகத் தொடர்ந்துவந்த பிறப்புரிமை போன்றதாகும். வேளாண்மை என்பது என்றும் 'பருவகாலச் சூதாட்டமாகவே' (gambling in the monsoon) இருந்தது. பருவமழை தவறிய பொழுதெல்லாம் விளைச்சல் பாழ்பட்டது. உழவர்கள் கடன் வாங்கி வாழும் நிலை ஏற்பட்டது.

2. சமயச் சடங்குகள் :

பொதுவாக இந்தியர்கள் பிறப்பு முதல் இறப்புவரை எத்தனையோ சமயச் சடங்குகளைச் செய்தனர். பணமில்லாத பொழுதும் கடன் வாங்கி அவற்றை நிறைவேற்றும் வழக்கம் இருந்தது. கண்மூடிப் பழக்கங்களாலும், சமய, சமுதாயச் சடங்குகளாலும் உழவர்கள் தொடர்ந்து கடன் வாங்கிக் கொண்டே இருந்தனர்.

3. பட்ட கடன்களின் பொறுப்பு :

கிராமத்தவர்கள் பிறக்கின்ற பொழுதே கடனில் பிறந்தார்கள். முன்னோர்கள் பட்ட கடன் அவர்களின் தோளில் ஏறியது. இராவணன் தலை வெட்ட வெட்ட முளைக்குமென்ற புராணக்கதைபோல, கிராமத்து மக்கள்

கடன் தவணைத் தொகை கட்டக் கட்டத் தாங்கள் பட்ட கடன் தேயாமல் இருப்பதனைக் கண்டனர்.

4. ஏமாற்றுதலும் சுரண்டலும் :

கடன் கொடுத்தவர்கள் எழுதப் படிக்கத் தெரியாத கிராமத்தார்களை ஏமாற்றினர். அவர்கள் எழுதிய அல்லது ஒன்றும் எழுதாத வெள்ளைத்தாள்களில் படிக்காத உழவர் களின் கைநாட்டுப் பெற்றனர். கடனின் தொகையை விருப்பப்போல் எழுதி ஏமாற்றினர். கூடுதலாகக் கூட்டு வட்டி பெற்றனர். இதனால் 'பிடித்த பேய் விடாதது போல' பட்ட கடனும் தொலையாமல் இருந்தது.

5. நிலத்தின் மதிப்புக் கூடல் :

பணப் பொருளாதார அமைப்பில் நிலம் மதிப்புடைய பொருளாகியது. நிலத்தின் மதிப்பு உயர உயர நிலத்தின் மீது கடன் கொடுக்க கடன்கொடுப்பவர்கள் முன்வந்தனர். நிலத்தை ஈடாக வைத்துக் கடன் வாங்கினர். இதனால் கடனின் அளவு கூடியது.

6. வருவாய் குறைவு :

கிழக்கிந்திய நிறுவனத்தின் வாணிப வளர்ச்சியால் ஏற்பட்ட மாற்றங்கள் வணிகர்களுக்குச் சாதகமாகவும் பயிர்த் தொழில் செய்பவர்களுக்குப் பாதகமாகவும் அமைந்தன. புதிய அங்காடி முறையில் விளைபொருள் களுக்குக் குறைந்த விலை கிடைத்தது. உழவர்கள் நிலத் தீர்வையைப் பணமாகச் செலுத்த வேண்டிய கட்டாயத்திற் குள்ளானர்கள். வருவாய் குறைந்த நிலையில் வரி செலுத்தக் கடன் வாங்கும் நிலை ஏற்பட்டது.

7. தொழில் வினைஞர்களின் கடன் பாரம்:

தொழில்களைச் செய்துகொண்டிருந்த கைவினைஞர் களும் கடன் வாங்கும் நிலையிலேயே இருந்தனர். குறிப்

பாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த நெசவுத்தொழிலில் தொழிலாளர்கள் மிகுதியாகக் கடன்பட்டிருந்தனர். பெருமளவில் கைத்தறிகளைச் சொந்தமாக வைத்திருந்த செல்வந்தர்கள் தங்கள் கைத்தறிகளில் வேலை செய்பவர்களுக்குக் கடன் கொடுத்தனர். இத்தகைய கடன் பட்டதன் மூலம் நெசவாளிகளிற் சிலர் கொத்தடிமைகள்போல ஆயுள் முழுவதும் ஒருவருக்கு வேலைசெய்யக் கடமைப்பட்டிருந்தனர். தனிப்பட்ட நெசவாளிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளைக் குறிப்பிட்ட விலையில் தங்களுக்கு விற்க வேண்டுமென்ற கட்டுப்பாட்டின்மீது வணிகர்கள் கடன் கொடுத்தனர். இதுவும் ஒருவகைச் சுரண்டலுக்கு வழிவகுத்தது.

**விளைவுகள்:**

சரியான கட்டமைப்புள்ள கிராமக்கடன் முறை உருவாகாததால், கடன் கொடுத்து வாங்கல் ஒரு சுரண்டல் முறையாக இருந்தது. உழவர்கள், கைவினைஞர்கள் வாழ்க்கையில் வளம் சேராமைக்கு இது ஒரு காரணமாகும்.

ஒரு காலத்தில் தன்னிறைவு பெற்றிருந்ததோடு அமைதியான, எளிய வாழ்க்கை முறையும் கொண்டிருந்த கிராமங்களில் வறுமையும், பற்றாக்குறையும் தலைவிரித்தாடின. பொருளாதாரத்தில் கீழ்நிலையிலிருந்தவர்கள் கடன் கொடுப்போர், வணிகர் ஆகியோரின் பிடிக்குள் அகப்பட்டனர். மக்களின் வாழ்க்கையில் வளம் குறையத் தொடங்கியது.

## 6. கிழக்கிந்திய நிறுவனத்தின் வாணிப நடவடிக்கைகள்

இந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் ஏற்பட்ட பொழுது இந்தியப் பொருளாதாரம் தன்னிலை இழந்தது. ஐரோப்பியர்கள் வாணிப நோக்கோடு இந்தியாவிற்கு வந்தனர். அவர்களது வாணிபம் வளர வளர, இந்தியப் பொருளாதார அடிப்படை மாறுதலுக்கு உள்ளானது.

ஐரோப்பியர்கள் வாணிபத்தின்மூலம் இந்தியாவை இயன்ற வழிகளிலெல்லாம் சுரண்டினர். போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகிய நான்கு நாட்டினர் வாணிபத்தின்மூலம் இந்தியாவைச் சுரண்டுவதில் போட்டியிட்டனர். இந்த வாணிப ஆதிக்கப் போட்டியில் ஆங்கிலேயர்கள் வெற்றிபெற்றனர்.

ஆங்கிலேய ஆட்சிக்கு முந்திய இந்தியப் பொருளாதார மாற்றத்தின் இயல்பையும் விளைவையும் அறிந்துகொள்ள ஆங்கிலேயர்களின் வாணிப ஆதிக்கம் ஏற்பட்ட வரலாற்றுப் பின்புலத்தை அறிந்துகொள்ளுதல் தேவையாகும்.

### போர்ச்சுகீசியர்:

1498 ஆம் ஆண்டில் வாஸ்கோடகாமா என்னும் போர்ச்சுகீசிய மாலுமி ஆப்பிரிக்காவிலுள்ள நன்னம்பிக்கை முனையைக் கடந்து நமது நாட்டின் மேற்குக் கரையிலுள்ள கோழிக்கோட்டிற்கு வந்தார். அவரைத் தொடர்ந்து வாணிக நோக்கோடு போர்ச்சுகீசியர் இந்தியாவிற்கு வந்தனர்.

1503இல் இந்தியாவிற்கு வந்த போர்ச்சுகீசியப் படைத்தலைவரான அல்பான்சோ ஆல்புகெர்க் என்பவர் போர்ச்சுகீசிய வாணிப வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தார்.

போர்ச்சுகீசியர்கள் கொச்சி மன்னருடன் முதன்முதலில் வாணிப ஒப்பந்தம் செய்து கொண்டனர். கொச்சி அவர்களது வாணிப நகரமாகியது. 1510 இல் ஜெய்பூர் சுல்தானுக்குச் சொந்தமான கோவாவைக் கைப்பற்றி வாணிபத்தை விரிவடையச் செய்தனர். காலப்போக்கில் மேற்குக்கடற் கரைப்பகுதியிலுள்ள டையூ, டாமன் ஆகியவை அவர்களின் கைவசமாயின. கிழக்குக் கடற்கரையில் சாந்தோம் வங்காளத்தில் ஹூக்ளி ஆகிய இடங்களிலும் அவர்கள் தங்கள் வாணிபத்தளங்களை அமைத்துக்கொண்டனர்.

போர்ச்சுகீசியர்கள் ஆங்கிலேயர்களோடும் டச்சுக்காரர்களோடும் தீவிரமான வாணிபப் போட்டியில் ஈடுபட்டனர். தொடக்க காலத்தில் முகலாய மன்னர்களிடம் அவர்களுக்குச் செல்வாக்கு இருந்தது. அதனைப் பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலேயர்களுக்கு வாணிப உரிமை கிடைக்கவிடாமல் தடுத்தனர்.

ஆனால் போர்ச்சுகீசியர்கள் இந்தியாவிற்கு முதன் முதலாக வந்தும் கூட ஆங்கிலேயர்களோடு ஏற்பட்ட கடுமையான வாணிபப் போட்டியில் அவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. இறுதியில் அவர்கள் வாணிபத்தை ஆங்கிலேயர்களின் கையில் விட்டு கோவா, டையூ, டாமன் ஆகிய இடங்களில் முடங்கியிருந்து வாணிபம் செய்யும் நிலை ஏற்பட்டது. அவர்கள் தோல்வியடைந்ததற்கான காரணங்களைக் குறிப்பிட்டுக் கூறலாம்:

முதலாவதாக, போர்ச்சுகல் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட சின்னஞ்சிறு நாடு. அவர்களுக்குத் தாயகத்திலிருந்து பெருமளவில் உதவி பெற முடியவில்லை.

இரண்டாவதாக, போர்ச்சுகீசியர்க்ள் இந்தியர்களைக் கிறித்தவர்களாக மாற்றுவதில் தீவிரமாக இருந்தனர். இந்த மதமாற்ற நடவடிக்கைகளை மக்கள் வெறுத்தனர். முகமதிய மன்னர்களும் போர்ச்சுகீசியர்களின் சமய நடவடிக்கைகளை விரும்பவில்லை.

மூன்றாவதாக, போர்ச்சுகீசியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் 1612இல் ஒரு கடல் போர் நடைபெற்றது. இந்தப் போரில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர். தோல்வியடைந்த போர்ச்சுகீசியர்களை இந்திய மன்னர்கள் மதிக்காத நிலை ஏற்பட்டது.

நான்காவதாக, தொடக்க காலத்தில் ஆங்கிலேயர்களும் பிறநாட்டினரும் இந்தியாவில் வாணிப உரிமை பெறுவதைத் தடுத்துநிறுத்த முடிந்தது. ஆனால்1616ஆம் ஆண்டில் ஆங்கிலேய வணிகக் கழகம் அனுப்பிய தாமஸ்ரே முகலாய மன்னரிடம் வாணிப உடன்படிக்கை செய்து கொண்டவுடன், போர்ச்சுகீசியரின் வாணிப முற்றுரிமை அழிந்தது. வாணிபப் போட்டியில் அவர்களது கைதளர்ந்தது.

ஐந்தாவதாக, ஆங்கிலேயர்களின் சூழ்ச்சித்திறமிக்க வாணிபக் கழகத்தின் ஆளுநர்கள் விரைவாக அவர்களின் வாணிபத்தளங்களைப் பெருக்கினர். அவர்களின் ஆற்றலுக்கு முன்னால் போர்ச்சுகீசியர்கள் ஒதுங்கி வழிவிடுவதைத்தவிர வேறு மாற்றுவழி இருக்கவில்லை.

டச்சுக்காரர்கள் :

போர்ச்சுகீசியரைப் போன்று ஆங்கிலேயர்களின் வாணிப வளர்ச்சிக்குத் தொடக்க காலத்தில் டச்சுக்காரர்களும் பெரும் தடைக்கல்லாக இருந்தனர். இயல்பாகக் கப்பல் கட்டும் தொழிலில் தன்னிகரற்ற திறமை பெற்றிருந்த டச்சுக்காரர்கள் வலிமையான கடற்படை வைத்திருந்தனர். ஆதலால் நடைபெற்ற கடற்போர்களில் டச்சுக்காரர்களிடம் ஆங்கிலேயர் தோல்வியடைவதைத் தவிர்க்க இயலவில்லை.

டச்சுக்காரர்கள் மிளகு வாணிபத்தில் முற்றுரிமை பெற்றுத் திகழ்ந்தனர். மிகுதியாக விலை கொடுத்து அவர்கள் மிளகினை வாங்கியதால், அவர்களோடு ஆங்கிலேயர்களால் போட்டியிட முடியவில்லை. ஆங்கி

லேயர்கள் டச்சுக்காரர்களின் மிளகு வாணிப ஆதிக்கத்தைத் தகர்க்க மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் தோல்வி கண்டன. டச்சுக்காரர்கள் தங்களது கடற்படையின் மூலம் ஆங்கிலேயர்களுக்கு அடிமேல் அடிகொடுத்தனர்.

போரினால் டச்சுக்காரர்களை வெல்ல முடியாத ஆங்கிலேயர்கள் 1619 ஆம் ஆண்டில் இலண்டனில் ஒரு வாணிப ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு வாணிபக் கூட்டாளிகளாயினர். இந்த ஒப்பந்தத்தின்படி மிளகு வாணிபத்தில் பாதியையும், ஏலம், சாதிக்காய் போன்ற வாசனைப் பொருள்களின் வாணிபத்தில் மூன்றில் ஒரு பகுதியையும் ஆங்கிலேயர்கள் பெற்றனர். ஆனால் வாணிபப் போட்டியின் விளைவாக இந்த ஒப்பந்தம் குறுகிய காலத்திலேயே முறிவடைந்தது.

பதினேழாம் நூற்றாண்டின் முன்பகுதியில் பல இடங்களில் டச்சுக்காரர்களின் வாணிபச் செல்வாக்கு மேலோங்கியிருந்தது. 1610 இல் புலிகட்டிலும், (பழவேற்காட்டிலும்) 1616 இல் சூரத்திலும், 1659 இல் சின்சுராவிலும், அதனைத் தொடர்ந்து காசிம் பஜார், பரணகோவா, பாட்னா, பாலாசேர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களிலும், 1663 இல் கொச்சியிலும் அவர்கள் தொழிற்கூடங்களை அமைத்தனர். இக்காலத்தில் போர்ச்சுகீசியரோடு ஆங்கிலேயர்கள் டச்சுக்காரர்களை எதிர்த்தும் வெற்றி பெற இயலவில்லை.

1772 இல் நடைபெற்ற போரில் ஆங்கிலேயர்கள் டச்சுக்காரர்களை முறியடித்தனர். பல இடங்களில் அவர்களுடைய வாணிபத்தளங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். அதற்குப் பிறகு நாட்டுப்புறங்களில் மட்டும் சிறிய அளவில் வாணிபம் செய்து வந்த டச்சுக்காரர்களால் மறுபடியும் தலைதூக்க இயலவில்லை.

**பிரெஞ்சுக்காரர்கள் :**

ஆங்கிலேயர்களோடு கடுமையாக, நீண்டகாலம் வாணிபப் போட்டியிலும், அரசியல் ஆதிக்கப் போட்டியிலும்,

ஈடுபட்டவர்கள் பிரெஞ்சுக்காரர்கள். அவர்களை வென்ற பிறகுதான் ஆங்கிலேயர்களால் இந்தியாவில் தங்களது மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள முடிந்தது.

1664 ஆம் ஆண்டில் பிரெஞ்சுக் கிழக்கு இந்திய வாணிப நிறுவனத்தை அமைத்தனர். இதற்கு மூல காரணமாக இருந்தவர் பிரெஞ்சு நிதி அமைச்சரான கோல்பர்ட். அவர் அளித்த மிகுதியான முதலீட்டின் மூலம் அவர்களது வாணிப நிறுவனம் வலிமை பெற்றுத் திகழ்ந்தது. அவர் மேலும் ஆவன செய்தார்.

பிரெஞ்சுக்காரர்கள் 1668 இல் தங்களது முதல் தொழிற்சாலையை சூரத்தில் நிறுவினர். இக்கால கட்டத்தில் ஆங்கிலேயர்களால் முகலாய மன்னரான ஔரங்கசீப்பின் நன்னம்பிக்கையைப் பெற முடியவில்லை. இது பிரெஞ்சுக் காரர்களுக்குப் பெரும் வாய்ப்பாக அமைந்தது. பிரெஞ்சுக் காரர்கள் 1669 இல் மசூலிப்பட்டினத்திலும், 1673 இல் புதுச்சேரியிலும் தொழிற்சாலைகளை நிறுவினர்.

இடைப்பட்ட காலத்தில் செல்வாக்கை இழந்திருந்த பிரெஞ்சுக்காரர்கள் 1720 இல் மறுபடியும் வாணிபச் செல்வாக்குப் பெற முயன்றனர். 1725 இல் மாஹியும், 1739 இல் காரைக்காலும் பிரெஞ்சுக்காரர்களின் வசமாயின. அங்கெல்லாம் அவர்களின் வாணிபம் தழைத்தது.

புதுச்சேரியில் ஆளுநராக இருந்த டியூப்ளே பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கை உயர்த்தினர். 1746 இல் பிரெஞ்சுக் கப்பற்படையின் தளபதி லாபோர் டோனே என்பவர் ஆங்கிலேயர்களிடமிருந்து சென்னையைக் கைப்பற்றினர். ஆனல் 1748 இல் இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் இடையில் ஏற்பட்ட உடன் படிக்கை மூலம் ஆங்கிலேயர்கள் சென்னையைத் திரும்பப் பெற்றனர். அதன்பின் ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக் காரர்களும் கர்நாடகப் போரில் ஈடுபட்டனர். ஆங்கிலேயர் களின் ஆளுநராக இருந்த இராபர்ட் கிளைவ் ஆங்கிலேயர்

களுக்கு வெற்றிக்குமேல் வெற்றி தேடிக் குவித்தார். 1761 இல் ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்களை வெற்றி கொண்டு, தங்களது ஆதிக்கத்தை (ஏகாதிபத்தியத்தை) உறுதியாக நிலைநாட்டிக் கொண்டனர்.

**ஆங்கிலக் கிழக்கு இந்திய வாணிப நிறுவனம் :**

ஆங்கிலேயர் இங்கிலாந்தில் 1600 ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 31 ஆம் நாளில் இங்கிலாந்தின் அரசியான முதலாம் எலிசபெத்திடம் வாணிபம் செய்யும் தனி உரிமையைப் பெற்று, கிழக்கு இந்திய வாணிப நிறுவனத்தை (East India Company) உருவாக்கினர். கம்பர்லண்ட் பிரபுவின் தலைமையில் 200 இலண்டன் வணிகர்கள் இந்த நிறுவனத்தின் மூலம் இந்திய வாணிபத்தில் ஒரு பெருந்திருப்பத்தை ஏற்படுத்தி, இந்திய அரசியலின் போக்கையே மாற்றினர்.

கிழக்கு இந்திய வாணிப நிறுவனம் ஒரு கட்டுக்கோப்பான அமைப்போடு செயல்பட்டது. அதன் பொதுக் குழு விதிமுறைகளை வகுத்தளித்தது. ஓர் ஆளுநரும் (governor), ஒரு துணை ஆளுநரும் வாணிப நிறுவனத்தைப் பொறுப்பேற்று நடத்தினர். அரசு, நிறுவனம் எப்படிச் செயல்படவேண்டு மென்பதை வரையறுத்துக் கொடுத்தது.

**வாணிப வளர்ச்சி:**

ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவனம் போர்ச்சுகீசியரோடும், டச்சுக்காரரோடும், பிரெஞ்சுக்காரரோடும் போட்டியிட்டு, விரைவிலேயே தங்களுக்கென்று ஒரு வலுவான வாணிப அடிப்படையை உருவாக்கிக் கொண்டது.

1612 இல் ஆங்கிலேயர்கள் போர்ச்சுகீசியரை வென்று சூரத்தில் ஒரு பண்டகசாலையை அமைத்தனர். 1630 இல் அவர்களது வாணிபம் மசூலிப்பட்டினத்தில் வேரூன்றியது. அங்கு ஒரு தொழிற்சாலையை நிறுவினர். 1639 இல்

ஆங்கிலேயர்களின் வாணிபம் சென்னேக்குப் பரவியது. பிரான்சிஸ்டே சந்திரகிரி மன்னரிடமிருந்து சென்னேயைப் பெற்ருர். ஆங்கிலேயர் 1640 இல் அங்கு செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டித் தங்களது வாணிபத்திற்கு நிலேயான பாதுகாப்பைத் தேடிக் கொண்டனர். 1651 இல் கல்கத்தாவிலும் பின்னர் 1658 இல் பம்பாயிலும் பாட்ளு விலும், 1694 இல் காளிக்கட்டிலும் வாணிப நிலேயங்களே அமைத்தனர்.

ஆங்கிலேயர்களின் வாணிபம் விரைந்து வளர்ந்த தற்கான காரணங்களில் ஒன்று அவர்கள் துறைமுக நகரங் களில் தங்களுடைய வாணிப நிலேயங்களே அமைத்துக் கொண்டதாகும். அடுத்து, அவர்கள் பெருமளவில் முதலீடு செய்ததும், இங்கிலாந்து அரசர்களின் இடையரு ஆதரவு இருந்ததும் வளர்ச்சிக்குத் துணே செய்தது. 1680 ஆம் ஆண்டில் வங்காளத்தில்மட்டும் ஓர் இலட்சத்து ஐம்பதி ஞயிரம் பவுன் முதலீடு செய்தனர். முதலீட்டுப் பொருள் மிகுதியாக இருந்ததால் எண்ணற்ற பொருள்களில் விரிவாக முதலீடு செய்ய முடிந்தது.

திறமை மிக்க ஆங்கிலேய அலுவலர்கள் :

ஆங்கிலேயக் கிழக்கு இந்திய வாணிப நிறுவனத்தின் ஆற்றல் மிக்க அலுவலர்கள் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணேயாக இருந்தனர். சர் தாமஸ் ரோ நாற்பதாண்டு களுக்கு மேல் நிறுவனம் விரிவடைய வழிகாட்டி உதவினர்.

ஆங்கிலேயர் வங்கப்படைத் தலேவனுன மீர்ஜமுலா என்பவனின் ஆதரவைப் பெற்று, வங்கத்தில் ஆங்கில வாணிபம் செழித்து வளர வகைதேடினர்.

சூரத் வணிகக் கிளேயின் தலேவராகவும், பம்பாயில் ஆளுநராகவும் இருந்த ஜெரால்ட் ஆங்கில் என்பவரும், கிழக்கு இந்திய நிறுவனத்தின் இயக்குநராகவும் (Director)

ஆளுநராகவும் இருந்த ஜோசையா சைல்டு என்பவரும் நிறுவனத்தின் வாணிப மேம்பாட்டிற்கு வழிவகுத்தனர்.

முகலாய மன்னரான ஔரங்கசீப் முதலில் ஆங்கிலேயர்களின் வாணிபத்திற்குச் சாதகமாக இருக்கவில்லை. இதனால் வங்கத்தில் வாணிபம் விரிவடைவதில் தடை ஏற்பட்டது. மன்னர் விதித்த வாணிப வரி அவர்களது வாணிப வளர்ச்சியைத் தடைசெய்தது. ஆனால் ஆங்கிலேய அலுவலர்கள் மனம் தளரவில்லை. கல்கத்தாவிலும் கோவிந்தபூரிலும் விரிவான அளவில் நிலத்தை விலைக்கு வாங்கி வருவாயைப் பெருக்கினர். கல்கத்தாவில் வில்லியம் கோட்டையைக் கட்டிய பிறகு, கல்கத்தா தனித்துச் செயல்படத் தொடங்கிற்று. சர் சார்லஸ் ஐர் அதன் தலைவராகி அயராது உழைத்தார்.

**வாணிப நகரங்களும் வாணிபப் பண்டங்களும் :**

தொடக்ககாலத்தில் ஆங்கிலேயர்களின் தலையாய வாணிபத்தளமாக சூரத் விளங்கியது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து திரட்டிய செய்பொருள்களை சூரத்திற்குக் கொண்டு வந்தனர். ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருந்து கொண்டுசென்ற பொருள்களில் மஸ்லின் துணிகள், பருத்தி ஆடைகள், சாயப் பொருள்கள், வெடியுப்பு ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான பொருள்களை சூரத் மூலமே பகிர்ந்தளித்தனர். புரோச், பரோடா, ஆக்ரா ஆகிய இடங்களிலும் ஆங்கிலேயர்களின் வாணிப, தொழில் நிறுவனங்கள் அமைந்திருந்தன.

பம்பாய் நகரம் ஆங்கிலேயர்களின் கைக்குச் சென்ற பிறகு சிறந்த வாணிபத் தலைநகராக வளர்ந்தது. அந்த வட்டாரத்தில் பருத்தி ஆடைகள் மிகுதியாகக் கிடைத்தன. மசூலிப்பட்டினமும் ஒரு வாணிப நகரமாக மாறியது.

சென்னையும், கல்கத்தாவும் துறைமுக நகரங்களாகவும், வாணிப நிலையங்களாகவும் இருந்ததால் ஆங்கிலேயர்களின் வாணிபம் நான்கு திக்கிலும் பரவியது.

ஔரங்கசீப் காலத்திற்குப் பிறகு:

ஔரங்கசீப்பிற்குப் பின்வந்த முகலாய மன்னரான பரூக்ஷியருக்கு வில்லியம் ஹாமில்டன் ஓர் அறுவை மருத்துவம் செய்து அவரது அன்பைப் பெற்றார். அவர் மன்னரிட மிருந்து கிழக்கு இந்திய வாணிப நிறுவனத்திற்குச் சில சலுகைகள் பெற்றுத்தந்தார்.

மன்னர் வழங்கிய வாய்ப்புக்களைக் கிழக்கு இந்திய நிறுவனம் நன்கு பயன்படுத்திக் கொண்டது. மற்றைய நாடுகளை இந்தக் காலகட்டத்தில் வெற்றி கண்டனர். வாணிபப் போட்டி குறைந்த நிலையில் தங்களது வாணிப ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டனர்.

இராபர்ட் கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ், காரன் வாலிஸ் பிரபு, வெல்லெஸ்லி பிரபு, டல்ஹௌசி. ஆகியோர் கிழக்கு இந்திய வாணிப நிறுவனத்தை இந்தியாவை ஆளுகின்ற நிறுவனமாக மாற்றினர். ஆங்கிலேயர்களின் அரசியல் ஆதிக்கம் இந்திய மண்ணில் வேரூன்றியது.

1857 ஆம் ஆண்டில் சிப்பாய்க் கலகமென்று ஆங்கிலேயர்கள் குறிப்பிட்ட இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் நடைபெற்றது. அதன் பிறகு இந்தியா 1858 ஆம் ஆண்டின் இந்தியச் சட்டப்படி இங்கிலாந்தின் நாடாளு மன்றத்தின் நேரடியான ஆட்சியின்கீழ் வந்தது.

# 7. இந்திய அரசியல் பொருளாதாரமும் கிழக்கிந்திய நிறுவனமும்

கிழக்கு இந்திய நிறுவனம் வாணிப நிறுவனமாக மட்டும் செயல்பட்டிருக்குமானால், இந்தியப் பொருளாதாரத்தில் வேறுவகையான தாக்குதல்கள் ஏற்பட்டிருக்கும். ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்த அரசியல் சூழ்நிலை வாணிபம் செய்ய இடந்தேடி வந்தவர்களை அழைத்து ஆட்சி செய்ய நாட்டைக் கொடுப்பதைப்போல அமைந்துவிட்டது.

வடக்கில் ஔரங்கசீப்பின் மறைவுக்குப் பிறகு ஆட்சி வலுவற்று இருந்ததால் குழப்பம் ஏற்பட்டது. தெற்கிலும் அரசர்களுக்கு இடையில் ஒற்றுமை இல்லை. இருந்த மன்னர்களுக்குப் பிறகு ஆட்சி மாறிய பொழுதெல்லாம் அரசின் உயர் அலுவலர்கள் அரசர்களுக்கு எதிராகச் செயல்பட்டனர். ஒரு நாட்டில் ஆட்சித் தலைமை சரியாக இல்லாதபொழுது பக்கத்து நாட்டை ஆண்டவர்கள் படை எடுத்தனர். தனிப்பெரும் மன்னர் இல்லாததால் நாடெங்கும் அரசியல் நிலையற்றதாக இருந்தது.

குழம்பிய குட்டையில் எளிதாக மீன் பிடிப்பதைப்போல குழம்பிய இந்திய அரசியலில் தங்களது கொடியை நாட்ட, கிழக்கு இந்திய நிறுவனம் முயன்றது. குழப்பமின்றி இருந்த இடத்தில் கூட, அரசியல் குழப்பத்தை உருவாக்கித் தங்களது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டனர்.

ஆங்கிலேயர்கள் இந்திய அரசியலில் வெற்றிக்கொடி நாட்டியதற்கான காரணங்களைக் கூறலாம்:

முதலாவதாக, ஆங்கிலேயர்களிடம் தற்காலப் போர்த் தளவாடங்கள் இருந்தன. அவர்களுடைய துப்பாக்கி, பீரங்கிகளுக்கு முன்னால் இந்தியர்களின் வாளும், வேலும் செயலற்றுப்போயின.

இரண்டாவதாக, அவர்களிடம் ஆற்றல்மிக்க கடற்படை இருந்தது. ஆதலால் கடல்சூழ்ந்த இந்தியாவின் தென் பகுதியை வளைத்துப் பிடிக்க முடிந்தது.

மூன்றாவதாக, பிற நாட்டினரின் வாணிபப் போட்டியில் வெற்றி பெற்ற பொழுதே, அவர்களைச் சில இடங்களில் ஒதுங்கி, முடங்கச் செய்துவிட்டனர். ஆதலால் அவர்களது கை எளிதாக மேலோங்கி நின்றது.

நான்காவதாக, இந்திய ஆட்சியாளர்களிடம் ஒற்றுமை இல்லை. உட்பகையின் காரணமாக வலுவிழந்து நின்றனர். பகைவர்களுக்குள்ளேயே கைக்கூலிகளை உருவாக்கிக் கொண்டனர். 'பிரித்தாளும் சூழ்ச்சி' அவர்களுக்கு வெற்றிக்குமேல் வெற்றியைத் தேடித்தந்தது.

ஐந்தாவதாக, கிழக்கு இந்திய நிறுவனத்தின் ஆளுநர்களாக வந்தவர்கள் சூழ்ச்சித்திறனிலும், போர்க் கலையிலும் வல்லவர்களாக இருந்தனர். ஆதலால் வாணிபத்தைப் பெருக்கி ஆதாயத்தைத் தேடும் முயற்சியில் நாட்டையும் வளைத்தனர். 'ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை' அடித்து வீழ்த்தினர். ஆங்கிலேயர் தம்முடைய ஆட்சி அமைந்தால் தொடர்ந்து இந்தியாவைச் சுரண்டலாமென்று எண்ணியதால் இங்கிலாந்தின் ஆட்சிக்கு அடித்தளம் அமைத்தனர்.

சென்னையில் ஆதிக்கம் :

சென்னையில் கோட்டை கட்டியபிறகு தெற்கில் ஆங்கிலேயர்களின் செல்வாக்கு உயர்ந்தது. முதலில் தங்களுடைய வாணிகத்தை விரிவடையச் செய்வதற்கு வேண்டிய பணிகளைச் செய்தனர். 1717 இல் ஐந்து புறநகர்ப் பகுதிகளையும், 1754இல் வேப்பேரியையும் வேறு நான்கு இடங்களையும் விலைக்கு வாங்கினர். சென்னைத் துறைமுகத்தை நன்கு கட்டிக்கொண்டனர்.

கர்நாடகப் போர்களில் ஆங்கிலேயர்களுக்கு வெற்றி கிடைத்தமையால் தெற்கில் அவர்களுக்கு எதிர்ப்புக் குறைந்தது. வடக்கில் கவனம் செலுத்த வாய்ப்புக் கிடைத்தது.

**வங்கத்தில் விரிவாக்கம் :**

ஆங்கிலேயர்களின் வங்க வாணிப வளர்ச்சிக்கு அங்கு நவாபாக இருந்த சுராஜ் உத் தெளலா முட்டுக்கட்டையாக இருந்தார். அவர் ஆங்கிலேயர்களின் தொழிற்சாலைகளைக் கைப்பற்றியும், 146 ஆங்கிலேயர்களைச் சிறைப்படுத்தியும் 'கல்கத்தா இருட் குகைக்குள்' (the black hole of calcutta) அடைத்து வைத்தும், அவர்களில் 126 பேரைக் கொன்றும் ஆங்கிலேயர்களை மிரட்டிக்கொண்டிருந்தார்.

ஆங்கிலேயக் கிழக்கு இந்திய நிறுவனம் இராபர்ட் கிளைவையும், கப்பற் படைத் தளபதி வாட்சனையும் வங்காளத்திற்கு அனுப்பியது. பிரித்தாளும் கலையில் வல்லவரான கிளைவ் அங்கிருந்த உட்பகையைப் பயன் படுத்திக்கொண்டார். நேரம் பார்த்து நவாப் சுராஜ்-உத் தெளலாவை ஆட்சியிலிருந்து நீக்கி, அவரின் படைத் தளபதியான மீர்ஜாபரை நவாப் ஆக்கினர். 1757இல் நடைபெற்ற பிளாசிப் போரில் சுராஜ்-உத்-தெளலாவைத் தோற்கடித்தனர். அவர் மாண்டார். மீர்ஜாபரை நவாப் ஆக்கித் தங்களுக்கு வேண்டிய வாணிப உரிமைகளைப் பெற்றனர். 1758இல் கிளைவ் வங்காளத்தின் ஆளுநரானர்.

கிளைவ் இங்கிலாந்து சென்றிருந்தபொழுது வங்கத்திலிருந்த கிழக்கு இந்திய நிறுவனத்தின் ஆட்சியாளர்கள் மீர்ஜாபரை நீக்கிவிட்டு அவருடைய மருமகனை மீர்காசிமை நவாப்பாக்கி அவரிடமிருந்து சில இடங்களையும் சலுகைகளையும் பெற்றனர். மீர்காசிமும் அயோத்தி நவாபான ஷுஜா உத் - தெளலாவும் சேர்ந்துகொண்டு ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கிளம்பினர். 1764 இல் பக்சார் போரில் மீர்காசிமைத் தோற்கடித்து மறுபடியும்

மீர்ஜாபரை நவாப் ஆக்கினர். அதாவது ஆங்கிலேயர்களைப் பகைத்துக் கொள்பவர்கள் ஆட்சி செய்ய முடியாதென்ற சூழ்நிலையை உருவாக்கினர். 1765 இல் மறுபடியும் வங்காள ஆளுநராக வந்த கிளைவ் அயோத்தி நவாபான ஷுஜா உத் தௌலாவுடன் உடன்படிக்கை செய்து கொண்டு, ஆங்கிலேயர்களின் மேலாதிக்கத்தை நிலைப்படுத்தினர்.

மைசூரில் ஆங்கிலேயர்கள் :

ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் பரவுவதற்கு மைசூரை ஆண்டு வந்த பெரும் வீரரான ஹைதர் அலி முட்டுக் கட்டையாக இருந்தார். ஆங்கிலேயர்கள் மராட்டியர்களோடும் ஹைதராபாத் நிஜாமோடும் கூட்டு உடன்படிக்கை செய்துகொண்டு ஹைதர் அலியோடு போரிட்டனர். முதல் மைசூர்ப் போரில் ஆங்கிலேயர்கள் படுதோல்வி அடைந்தனர். வேறு வழியின்றி 1769 இல் ஹைதர் அலியோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர்.

ஆங்கிலேயர்கள் தங்களுடைய அரசியல் ஆதிக்கம் ஹைதர் அலி இருக்கும் வரை நிலையற்றதாகவே இருக்குமென உணர்ந்தனர். ஆதலால் 1780 இல் இரண்டாம் மைசூர்ப்போர் மூண்டது. இப் போரில் ஹைதர் அலி இறக்க, அவருடைய மகன் திப்பு சுல்தானோடு ஆங்கிலேயர் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

திப்பு சுல்தானும் தந்தையைப் போன்று தீரம் மிக்க மன்னனாக இருந்தார். அவர் தம் கொள்கைகளும் நடவடிக்கைகளும் ஆங்கிலேயர்களின் ஆதிக்க வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதாகவே கருதினர். மறுபடியும் மராட்டியர்களோடும் நிஜாமோடும் உடன்படிக்கை செய்துகொண்ட ஆங்கிலேயர்கள் திப்புவை எதிர்த்தனர். 1790 இல் மூன்றாம் மைசூர்ப்போர் நடைபெற்றது. இதில் திப்பு தோற்றதால் 1792 இல் ஏற்பட்ட சீரங்கப்பட்டண உடன்படிக்கையின்படி, மலபார், திண்டுக்கல், சேலம், கோயமுத்தூர் ஆகிய பகுதிகளைக் கொண்ட பாராமஹால் என்னும்

113393

பகுதிகளை ஆங்கிலேயர் பெற்றனர். மறுபடியும் திப்பு சுல்தான் இழந்த பகுதிகளைப் பெற முயன்றார். ஆனால், 1799இல் அவர் தோல்வியடையவே அவரது தலைநகர் சூறையாடப் பெற்றது. அதன் பிறகு எந்த எதிர்ப்புமின்றி மைசூர் வட்டாரத்தில் ஆங்கிலேயக் கிழக்கு இந்திய நிறுவனத்தின் ஆட்சி வலுப்பெற்றது.

மராட்டியத்திலும் வெற்றி :

ஆங்கிலேயர்களுக்கு வலுவான எதிர்ப்பு இருந்த மற்றொரு பகுதி மராட்டியமாகும். மராட்டியர்களின் பகையையும் முறியடிக்கக் கிழக்கு இந்திய நிறுவனம் தக்க முடிவுசெய்தது.

மராட்டிய ஆட்சியாளர்களான பீஷ்வாக்கள் இரு பிரிவினராகத் தங்களுக்குள் உட்பகை பாராட்டிக் கொண்டிருந்தனர். அந்தச் சூழ்நிலையை ஆங்கிலேயர்கள் தங்களுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்திக்கொண்டனர். ஒரு குழுவினரோடு உடன்படிக்கை செய்துகொண்டனர். இதனை மற்றொரு குழு எதிர்த்ததால் முதல் மராட்டியப் போர் 1774 இல் நடைபெற்றது. இந்தப் போரின் மூலம் ஆங்கிலேயர்களுக்குச் சில பகுதிகள் கிடைத்த போதிலும் அவர்களுக்கு முழு வெற்றி கிடைக்கப்பெறவில்லை.

சிந்தியா, பான்ஸ்லே, ஹோல்கார் ஆகிய மராட்டிய ஆட்சித்தலைவர்கள் (பீஷ்வாக்கள்) தொடர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்தனர். இதனால் 1802 இல் இரண்டாம் மராட்டியப் போர் மூண்டது. இதில் ஆங்கிலேயர்கள் பெற்ற வெற்றியால் மராட்டியத்திலும் அவர்களது கை ஓங்கியது.

வாணிப நடவடிக்கைகளின் விளைவுகள் :

ஆங்கிலேயர் ஒரு பக்கம் இந்தியாவிலிருந்த அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றினர். மறுபக்கம் கைப்பற்றிய அரசியல் மேலாதிக்

கத்தின் துணைகொண்டு தங்களுடைய வாணிபச் சுரண்டலைக் கற்பனைக்கும் எட்டாத அளவிற்கு வளர்த்துக் கொண்டனர்.

ஆங்கிலேயர்களின் வாணிப நடவடிக்கைகள் படிப் படியாக இந்தியப் பொருளாதாரத்தின் ஆணிவேரை அரித்தன. நாட்டு அரசியல் மட்டுமன்றிப் பொருளாதாரமும் மக்களை அடிமைப்படுத்துகின்ற நிலைக்கு வந்தது.

முதலில் ஆங்கிலேயர்கள் இங்கிருந்து ஏலக்காய், இலவங்கம் போன்ற மணப் பொருள்களையும், இங்கு உற்பத்தியான அருமையான பருத்தி, பட்டுத்துணிகளையும் வாங்கி இங்கிலாந்திற்கு அனுப்பினர். கைவினைஞர்களின் பொருள்களுக்கு விலை கொடுத்து வாங்கியதன் மூலம் பணப்புழக்கத்தை மிகுதிப்படுத்தினர். பண்டமாற்றுப் பொருளாதாரம் பணப்பொருளாதாரமாக மாறியது. இந்த மாற்றம் கிராமங்களின் தன்னிறைவுத் தன்மைக்கு இடி போன்று அமைந்தது.

தொழிற்சாலைகளின் அமைப்பு :

ஆங்கிலேயக் கிழக்கு இந்திய நிறுவனத்தினர் கைவினைஞர்களிடமிருந்து செய்பொருள்களை வாங்குவதை விட அவர்களைக் கூலியாள்களாக மாற்றிப் பொருள்களை உற்பத்தி செய்வதால் மிகுதியாக ஆதாயம் பெறலாமெனத் தீர்மானித்தனர். இதனால் பல இடங்களிலும் பருத்தி, பட்டு ஆடைகளை ஒரே இடத்தில் கைத்தறிகளை அமைத்து நெய்கின்ற தொழிற்கூடங்களை அமைத்தனர். இவற்றில் கைவினைஞர்களைக் குறைந்த கூலிக்குக் கட்டாயமாக உழைக்கும்படி வற்புறுத்தினர்.

வாணிப நோக்கில் அமைந்த தொழிற்கூடங்கள் அதுவரை உரிமையோடு பணியாற்றிய கைவினைஞர்களைக் கூலித் தொழிலாளிகளாக்கின. இந்திய நெசவாளர்களை அடிமைகள் போல நடத்த இத்தகைய தொழிற்கூடங்கள் வாய்ப்பளித்தன. தொழிற்கூடங்களில் வேலை செய்த

கைவினைஞர்கள் கொத்தடிமைகள் போலக் கசக்கிப் பிழியப் பட்டதையும், பல வகையான இன்னல்களுக்கு ஆளானதையும் வரலாற்று ஆசிரியர்கள் விரிவாக எழுதியுள்ளனர்.

ஆங்கிலேயர்கள் செய்பொருள்களின் உற்பத்தி அளவையும் விலையையும் தங்களது விருப்பம் போல் கட்டுப் படுத்தினர். துணிகளை வகை பிரிப்பதும் விலை நிர்ணயிப் பதும் அவர்களின் முற்றுரிமையாகிவிட்டது.

இடைத்தரகர்கள் (middlemen) :

கிழக்கு இந்திய நிறுவனம் கைவினைஞர்களிடமிருந்து செய்பொருள்களைத் திரட்ட இடைத்தரகர் முறையை ஏற்படுத்தியது. இடைத்தரகர்கள் தங்களுக்குக் கிடைக் கின்ற தரகுப் (commission) பணத்திற்காகப் பணி யாற்றினர்.

தரகர்களுக்குத் தங்களுடைய வட்டாரத்திலுள்ள எல்லா நெசவாளர்களைப் பற்றியும் நன்கு தெரியும். அவர் களுடைய பெயர்களைத் தங்களது பதிவேட்டில் குறித்துக் கொண்டனர். அவர்கள் நெய்த துணிகளைக் குறிப்பிட்ட இடைவெளிகளில் சென்று வாங்கினர். வேறு யாருக்கும் துணியை விற்காமல் கண்காணித்தனர்.

துணிகளை வகைப்படுத்தி, விலை நிர்ணயிக்கின்ற உரிமை கிழக்கு இந்திய நிறுவனத்திடம் இருந்ததால் நெசவாளர்களுக்குத் துணிக்குரிய விலை கிடைக்கவில்லை. நெசவாளர்கள் இந்தச் சுரண்டலை எதிர்க்கும் ஆற்றலற் றிருந்தனர்.

கிழக்கு இந்திய நிறுவனத்தில் பணியாற்றிய இந்தியக் கணக்கர்களும் நெய்த துணியைத் திரட்டும் பணியில் ஈடு பட்டனர். இதனால் அவர்களுக்கு நல்ல வருவாய் கிடைத்தது. நெசவாளர்களிடமிருந்து மிகவும் குறைந்த

விலைக்குத் துணியை வாங்கிக் குறிப்பிட்ட விலைக்கு நிறுவனத்திற்குக் கொடுத்தனர். இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் நெசவாளர்களைக் கணக்கர்கள் சுரண்டுவதை நிறுவனம் அறிந்திருந்த போதிலும் அவர்களைக் கட்டுப்படுத்தவில்லை. இதனால் நெசவாளர்களின் நிலை மிகவும் இரங்கத்தக்கதாக மாறியது. செய்தொழிலை விட்டு ஓட வழிவகை பார்த்தனர்.

இந்திய வணிகர்களின் வீழ்ச்சி :

ஆங்கிலேயர்கள் வாணிபத்தில் மேலாதிக்கம் பெறுவதற்குமுன்னால் ஆங்காங்கு இந்தியப் பெரும் வணிகர்கள் இருந்தனர். அவர்கள் நேர்மையோடு வாணிபம் செய்தனர். அவர்கள் இந்தியாவில் விளைபொருள்களாகக் கிடைத்த மணமிகு பண்டங்களையும், அரிய கலைநுட்பமிக்க செய்பண்டங்களையும் வாங்கினர். அவர்கள் ஏற்றுமதி இறக்குமதி வாணிபத்தில் ஈடுபட்டுத் திரண்ட செல்வத்தைத் தேடிக்கொண்டிருந்தனர்.

ஆங்கிலேயக் கிழக்கு இந்திய நிறுவனம் இத்தகைய இந்திய வணிகர்களின் செல்வாக்கு தங்களது சுரண்டலுக்கு இடையூறாக இருப்பதாகக் கருதியது. ஆதலால் அவர்களுடைய செல்வாக்கையும், வாணிப நடவடிக்கைகளையும் குறைக்கத் தீவிரமாக முயன்றது. ஆங்கிலேயர்கள் தங்களது அரசியல் மேலாதிக்கமுள்ள இடங்களில் இந்தியர்கள் சிலவகைப் பண்டங்களை வாங்கி விற்பதைத் தடுத்தனர்.

இந்திய வணிகர்கள் வாணிபஞ் செய்த பொருள்களின் மீது மிகுதியாகச் சுங்கவரி விதித்தனர். வேறுவகைகளிலும் ஆங்கிலேயர்கள் இன்னல்களை விளைவித்தனர். இத்தகைய தொல்லைகளுக்கு ஈடு கொடுக்க முடியாத பெருவணிகர்கள் வாணிபத்தை விட்டு ஒதுங்கினர்.

சிறு வணிகர்களே ஆங்காங்கு வாணிபம் செய்தனர். அவர்களும் ஆங்கிலேயக் கிழக்கு இந்திய நிறுவனங்

களுக்குத் துணைசெய்கின்றவர்களாகத் தங்கள் வாணிப நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனால் இந்தியர்களின் வாணிபம் சுருங்கியது.

**தொழில், வாணிப நகரங்களின் சீர் குலைவு:**

கிழக்கு இந்திய நிறுவனத்தின் வாணிபம் விரிவடைந்து, அவர்களது கட்டுப்பாடு வலுப்பெற்ற நிலையில் இந்தியக் கைத்தொழில்கள் நலிந்து அழியத் தொடங்கின. இதனால் தொழிலாளர்கள் நகரங்களை விடுத்து வாழ வழி தேடிச் சிற்றூர்களுக்குச் சென்றனர். சிற்றூர்களிலும் இருந்த பழைய செழிப்பு நிலை மாறியது.

ஆங்கிலேயர்கள் இங்கிலாந்தில் செய்த பொருள்களை இந்தியாவில் கொண்டுவந்து விற்கின்ற நிலை வந்த பொழுது, இந்தியா மூலப்பொருள்களை விளைய வைக்கின்ற ஒரு வேளாண்மை நாடாக மாறியது. இந்திய வேளாண்மை இங்கிலாந்தின் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் மாறியது.

இந்திய நகரங்கள் சீர் குலைய, கிராம வாழ்க்கையும் வாட்டமுற, மக்கள் வாழ வகையற்றுத் தடுமாறும் நிலை ஏற்பட்டது. வறுமையிலும் அறியாமையிலும் மக்கள் வாடித் தவித்தனர். இந்தக் கொடுமையான நிலை உச்சக்கட்டத்தை அடைந்த பொழுதுதான் ஆட்சிப்பொறுப்பு கிழக்கிந்திய நிறுவனத்தின் கையிலிருந்து இங்கிலாந்தின் பாராளு மன்றத்திற்கு மாறியது.

# 8. நிலவுடைமை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள்

ஆங்கிலேயக் கிழக்கு இந்திய நிறுவனம் வணிக மேலாதிக்கமும் அரசியல் ஆதிக்கமும் பெற்ற காலத்தில் நாட்டுப்புறங்களில் குழப்ப நிலை தொடர்ந்தது. "இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன," என்று அரசியல் விழிப்புணர்ச்சியின்றியிருந்த, அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்த கிராம மக்களை அறிவும் ஆற்றலும் பெற்றவர்கள் இயன்ற அளவிலெல்லாம் சுரண்டினர்.

கிராமப் பொருளாதாரமான வேளாண்மைப் பொருளாதாரத்தில் நிலம்தான் மதிப்புடைய நிலையாய உற்பத்திக் காரணியாக இருந்தது. நிலத்திற்கு உரிமை கொண்டாடியவர்கள் நிலவரியைப் பெறுகின்ற உரிமை பெற்றனர். அரசுகளும் ஆட்சிகளும் மேல்மட்டத்தில் மாறிக்கொண்டிருந்த வேளையில் பெரிய அலுவலர்களும், செல்வாக்கும் சொல்வாக்கும் பெற்றவர்களும் குறிப்பிட்ட வட்டார நிலத்திற்கு வரிதிரட்டும் உரிமையைத் தங்களுடையதாக்கிக்கொண்டு, தங்களுக்குக் கிடைத்ததில் மாறுகின்ற ஆட்சியாளர்களுக்கு ஒரு பகுதியைப் 'படியளந்து' வந்தனர். ஆட்சியாளர்கள் இப்படிக் கிடைத்த பணத்தோடு மனநிறைவு பெற்றதால், கீழ்மட்ட நிலவுடைமை—உரிமை பற்றி எண்ணிப் பார்க்கவில்லை. அதற்கு வேண்டிய அமைதியான சூழ்நிலையும் இல்லை.

இத்தகைய சூழலினால் ஏற்பட்ட பெரும் விளைவு அரசுக்கும் நிலத்தைச் சாகுபடி செய்தவர்களுக்கும் நேரடித் தொடர்பு இல்லாமல் போனதுதான். நிலவரியைத் திரட்டுபவர்கள் அரசுக்கும் உழவர்களுக்கும் நடுவில் 'இடை மனிதர்களாக' இருந்து, நிலவுடைமை அமைப்பின்

உண்மையான இயல்பும் அளவும் ஆங்கிலேயர்களுக்குத் தெரியவிடாமல் மறைத்தனர்.

**கிழக்கு இந்திய நிறுவனத்தின் ஈடுபாடு:**

ஆங்கிலேயர்கள் ஆட்சித் தலைமை பெற்றபொழுது அவர்கள் வாணிபத்தில் கிடைக்கும் ஆதாயத்தையும், பிற இயன்ற வருவாய்களையும் உச்ச நிலைக்குக் கொண்டு செல்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். அவர்களுக்கு அப்பொழுது இருந்த நிலவுரிமை முறையை மாற்றும் நோக்கம் இல்லை. இருந்த நிலையை நிலைப்படுத்தி நிலவரி வருவாயைப் பெருக்கக் கருதினர்.

ஆங்கிலேயர்கள் மேற்கொண்ட நிலவுடைமை உரிமை நிலைப்படுத்தும் நடவடிக்கைகளில் மூன்று நிலைகள் இருந்தன. முதலாவதாக, முன்பிருந்த நிலவுடைமை முறை அவர்களுக்குப் புரியாத புதிராக இருந்ததால் நிலக்கிழாரைத் தேடிக் காண்பதை ஒரு பணியாகக் கொண்டனர். அப்பொழுது நிலவரிகளைப் பெற்றுக் கொண்டிருந்த குறுநில மன்னர்கள், சமீன்தார்கள், தாலுக்தார்கள், சாகீர்தார்கள் ஆகியோரை நிலத்தின் உடைமையாளர்களாகத் தவறுகக் கருதினர். சமீன்தார்கள் என்பதற்கு நிலத்திற்கு (ஜமீன் - நிலம்) உரியவர்கள் என்பது பொருளாக இருந்தும் அவர்கள் வரி திரட்டும் உரிமையை மட்டும் பெற்றிருந்தவர்கள்தாம். தாலுக்தார்கள் என்றல் ஒரு வட்டத்திற்கு உரியவர்கள் (தாலுக் வட்டம்) அதாவது ஒரு வட்டாரத்தில் - நிலப்பகுதியில் - நிலவரி வாங்கும் அரசின் அலுவலர்கள் என்பது பொருள். (இன்றைய தாசில்தார்கள்போல என்று கூறலாம்.) சாகீர்தார்கள் என்பவர்கள் அரசனிடமிருந்து தங்களுடைய சீரிய பணிகளுக்காக மானியமாக (சாகீர் = அரசு மானிய நிலம்) நிலம் பெற்றவர்கள். அந்த நிலவுரிமை அவர்களிடம் இருந்தது. இவர்களை எல்லாம் கிழக்கு இந்திய வணிக நிறுவனம் ஒட்டு மொத்தமாக நிலவுடைமையாளர்களாகக் கருதியதுதான் தவறுகும்.

இரண்டாவதாக, ஆங்கிலேயர்களின் நிலவுரிமை முறையோடு ஒப்பிட்டுப் பார்த்து, இந்திய நிலவுடைமை முறையில் வேண்டிய மாற்றங்கள் செய்ய முயன்றனர்.

மூன்றாவதாக நிலவுரிமையை உறுதிப்படுத்தி, தங்களுக்கு யாரிடமிருந்து நிலவரி வருமென்பதை வரையறுக்கும் நடவடிக்கையில் இறங்கினர்.

வீரா ஆன்ஸ்டி 'இந்திய நிலவுரிமை' பற்றிக் குறிப்பிடுகையில், "இதன் விளைவாக, அளவீடுகளும், மதிப்பீடுகளும் ஒவ்வோரிடமாக மேற்கொள்ளப் பெற்றன. இவை நிலத்தீர்வை பட்டா நிர்ணயம் (land settlement) என அழைக்கப்பெற்றன. இவற்றின் நோக்கம் நிலம் யாருடையதென்பதையும் அரசாங்கத்துக்கு விளை பொருள் எவ்வளவு பங்கு உரியதென்பதையும் கண்டுபிடிப்பதுதான்," என்று கூறுகின்றார்.

மூன்று முறைகள்:

ஆங்கிலேயக் கிழக்கு இந்திய நிறுவனம் நிலவுரிமை முறையை நிலைப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக இந்தியாவில் மூவகை நிலவுடைமை முறைகள் ஏற்பட்டன. அவை :— i. சமீன்தாரி முறை. ii மகல் வாரி முறை. iii. ரயத்வாரி முறை என்பன.

இவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக விளக்கலாம்.

(i) சமீன்தாரி முறை: ஆங்கிலேயர்கள் 1793 இல் 'சமீன் நிலையான நிர்ணயம்' (permanent settlement) ஒன்றை வங்காளம், பீகார், வட சென்னைப் பகுதிகளில் மேற்கொண்டனர். இதன் விளைவாகச் சட்டப்படி சமீன்தாரி முறை நிலவுடைமை முறையாக ஒரு நிலையான இடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

முகலாய மன்னர்களின் ஆட்சியில் சமீன்தார்கள் இருந்தார்கள், ஆனால், அவர்கள் நில உரிமையாளர்களாக இருக்கவில்லை. அவர்களை நிலவரியைத் திரட்டுவதற்கு முகலாய மன்னர்கள் பயன்படுத்தினார்கள். வரிப்பணத்தில் ஒரு பகுதியைத் தங்கள் பணிக்கு ஊதியமாகப் பெற்றுக் கொண்டனர். அத்தகைய சமீன்தார்களை நில உடைமை யாளர்களாக மாற்றும் வகையில் முதலில் வங்கத்திலும் பிறகு வேறு சில பகுதிகளிலும் சமீன்தாரி முறையைக் கொண்டு வந்தனர்.

**இயல்புகள் :**

காரன்வாலிஸ் சமீன்தார்களுக்கு நிலவுரிமை வழங்கிப் புகுத்திய சமீன்தாரி முறையிலிருந்த தலையாய இயல்புகளைச் சுட்டிக்காட்டலாம்.

1. மாறாத திட்டம் :

வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் என்றைக்கும் மாறாமல் இருக்கும் வகையில் இத்திட்டத்தினை உருவாக்கினர். முதல் பத்தாண்டுகளுக்கு நிலவுரிமை யாளர்களான சமீன்தார்கள் எவ்வளவு வரி செலுத்த வேண்டுமென்பதைத் தீர்மானித்தனர். இது பத்தாண்டு கட்குப் பின்பும் தொடருமென அறிவித்தனர்.

2. தலைமை ஆளுநரின் மேலாதிக்கம் :

நிலவரியை மதிப்பிட்டு அறிவிக்கும் உரிமை தலைமை ஆளுநருக்கு இருந்தது.

3. வாரிசு உரிமை :

சட்டப்படி சமீன்தார்களும் அவர்களுடைய வாரிசுதார் களும் நிலத்தின் உரிமையாளர்களானார்கள். நிலவரியைத் திரட்டி உரிய காலத்தில் அரசுக்குக் கொடுப்பது அவர்களது கடமையாயிற்று.

4. நிலவரி செலுத்தாவிடில் :

நிலத்தைப் பயிரிடுகின்றவர்கள் நிலவரியைச் செலுத்தத் தவறினால், நிலத்தைப் பறிமுதல் செய்து ஏலம் விடவோ, விற்பனை செய்யவோ சமீன்தாருக்கு உரிமை வழங்கினர். சமீன்தார் தமக்குரிய நிலத்தை ஈடு வைத்துப் பணம் பெறும் உரிமையும் பெற்றிருந்தார்.

5. நிலவரியின் அளவு:

சமீன்தார்கள் கிழக்கு இந்திய நிறுவனத்திற்கு எவ்வளவு வரி செலுத்த வேண்டுமென்று மட்டும் குறிப்பிட்டிருந்தார்களே தவிர, சமீன்தார்கள் நிலத்தைப் பயிரிடுபவர்களிடமிருந்து எவ்வளவு வரிப்பணம் வேண்டுமானாலும் பெறலாமென்ற நிலை இருந்தது. இது சுரண்டலுக்கு வழி வகுத்தது.

6. அரசின் தலையீடு:

குடியானவர்களின் உரிமை பறிபோனால் அரசு தலையிட்டு அறங்காக்கும் என அறிவித்தார்கள். ஆனால், நடைமுறையில் குடியானவர்கட்கு எவ்வளவு கொடுமைகள் நடந்தாலும் அரசு தலையிடவில்லை.

எதிர்பார்த்தவை :

'ஆளுநர் தலைவ'ராக இருந்த காரன்வாலிஸ் சமீன்தாரி முறையை ஏற்படுத்திய பொழுது இதனால் சில குறிப்பிடத்தக்க விளைவுகள் ஏற்படுமென்று நம்பினர்.

முதலாவதாக, வங்காளத்தில் ஏராளமாக சாகுபடி செய்யாமல் தரிசாக நிலம் இருந்தது. இந்த நிலத்தைப் பயிரிட்டு வருவாய் பெற இந்த அமைப்பு துணையாக இருக்குமென்று எதிர்பார்த்தனர்.

இரண்டாவதாக, இந்திய வணிகர்கள் சிலரிடம் வாணிபத்தால் தேடிய பணம் மிகுதியாக இருந்தது. அவர்களை வாணிபத்துறையிலிருந்து ஒதுக்குவதில் கிழக்கு இந்திய நிறுவனம் தீவிரமாக இருந்தது. அவர்கள் தங்களது பணத்தை வேளாண்மையில் முதலீடு செய்வார்களென்று எதிர்பார்த்தனர்.

மூன்றாவதாக, நிலவுரிமை நிலையாக அமைந்தால் வேளாண்மை விளைச்சல் பெருகுமென்றும், இதனால் அவர்களது வாணிபம் கூடுமென்றும் நம்பினர்.

மாவட்ட வரி தண்டல் தலைவர்கள் :

வங்கத்தில் போன்று மற்ற மாநிலங்களிலும் நிலவுரிமையை நெறிப்படுத்த ஹென்றி வெல்லஸ் என்பவர் தலைமையில் ஓர் ஆணையர் கழகத்தை அமைத்தனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் வரி திரட்டும் பொறுப்பை மாவட்ட வரி தண்டல் தலைவர்களிடம் (collectors) ஒப்படைத்தனர். அவர்களுக்கு உதவியாக வட்டார வரி திரட்டும் அலுவலர்கள் இருந்தனர். அவர்களைத் தாசில்தார்கள் என்று அழைத்தனர். இவர்கள் சமீன்தார்களிடமிருந்து நிர்ணயிக்கப் பெற்ற நிலவரியைத் திரட்டினர். இதற்காகக் கிடைத்த வரியில் ஒரு பகுதியை ஊதியமாகப் பெற்றுக் கொண்டனர்.

அரசின் உரிமைகள் :

சமீன்தாரி முறையில் அரசின் உரிமைகளைத் தெளிவாக வரையறுத்திருந்தனர். இதனால் சிக்கல்களைத் தவிர்க்க முடியுமென ஆட்சியாளர்கள் எண்ணினர்.

முதலாவதாக, எல்லா நிலங்களிலும் கிடைக்கின்ற விளைச்சலில் ஒரு பகுதி அரசுக்குச் சொந்தமென்பதை நிலைநாட்டினர். இதனையே நிலவரியாக அரசு பெறும் உரிமை பெற்றிருப்பதை வெளிப்படையாக அறிவித்தனர்.

இரண்டாவதாக, அரசு தனக்குள்ள வரி வாங்கும் உரிமையைச் சமீன்தார்களுக்கு வழங்கியது. அதோடு கூட, சமீன்தார்களின் எல்லைக்குட்பட்ட நிலத்தை அவர்களுடைய தனியார் சொத்தாகக் கருதியது.

மூன்ருவதாக, நிலத்தின் முற்றுரிமை அரசுக்குரியதாதலால் சமீன்தார்கள் தர வேண்டிய நிலவரியின் அளவை நிர்ணயிக்கும் உரிமை அரசிடமே இருந்தது.

நிலவரி திரட்டுவோரின் உரிமைகள் :

புதிய அமைப்பில் நிலவரி திரட்டுபவர்கள் மிகுந்த ஆற்றலும் ஆதிக்கமும் உடையவர்களாஞர்கள். அவர்களுடைய தலையாய உரிமைகளைத் தொகுத்துக் கூறலாம்:

முதலாவதாக, அவர்களுக்குத் தனிச் சொத்துரிமை இருந்தது. அதனை அவர்கள் விருப்பம்போல் பயன்படுத்தலாம்.

இரண்டாவதாக, பொதுநிலங்களை நிர்வகிக்கும் உரிமை வரிதிரட்டுபவர்களுக்கு இருந்தது. பொதுவான மேய்ச்சல் நிலம், காடுகள், மீன்பிடிக்கும் துறைகள், தோப்புக்கள் போன்றவற்றை அவர்கள் கண்காணித்து வந்தனர்.

மூன்ருவதாக, தங்களுடைய எல்லைக்கு உட்பட்ட நிலத்தைக் குத்தகைக்கு விடும் உரிமையினை வரிதிரட்டுபவர்கள் பெற்றிருந்தார்கள். அவர்கள் குத்தகைக் காலத்தை நீட்டவோ குறைக்கவோ, குத்தகையாளர்களை யாற்றவோ செய்யலாம்.

நான்காவதாக, ஒவ்வொரு பயிரிடுபவரும் நிலவரி எவ்வளவு செலுத்த வேண்டுமென்பதை நிர்ணயிக்கும் உரிமையும் வரி திரட்டுபவர்களுக்குக் கிடைத்தது.

நிலச்சாகுபடியாளர்களின் உரிமைகள் :

கிழக்கு இந்திய நிறுவனத்தின் ஆட்சியாளர் நிலவுரிமையை நிர்ணயித்தபொழுது நிலச்சாகுபடியாளர்களின் உரிமைகளையும் வரையறுத்தனர். சட்டப்படி நிலச்சாகுபடியாளர்கள் சமீன்தார்களிடம் பயிரிடப்பெற்றிருக்கும் நிலத்திற்குப் பட்டாக்களைக் கோரிப் பெறும் உரிமை பெற்றிருந்தனர். பட்டா மறுக்கப்பட்டால் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம்.

ஒருவர் ஒரு நிலத்தைப் பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து சாகுபடி செய்தால் அந்த நிலத்தின்மீது அவருக்கு நிலையான உரிமை கிடைத்தது. அவரை அதற்குப் பிறகு எளிதாக வெளியேற்ற முடியாது.

நிலையான சாகுபடியாளர்களிடம் வாங்கும் நிலத்தீர்வையைக் கூட்டக்கூடாதெனச் சட்டம் தடை செய்திருந்தது.

அரசின் சட்டப்படி உழுது பயிரிட்டவர்களுக்குச் சில உரிமைகள் இருந்தபோதிலும், நடைமுறையில் அவை உழவர்களைக் காக்கவில்லை. அவர்கள் சமீன்தார்களின் ஆதரவில் வாழவேண்டிய நிலையே இருந்தது.

ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்த நன்மைகள் :

சமீன்தாரி முறையில் ஆங்கிலேயர்கள் சில நன்மைகளைப் பெற்றனர்.

முதலாவதாக, அரசுக்குக் கிடைக்கின்ற வருவாயை உறுதி செய்துவிட்டனர். நாட்டில் விளைந்தாலும் விளையாவிட்டாலும் அரசுக்கு வரவேண்டிய வருவாய் கிடைத்து வந்தது.

இரண்டாவதாக, சமீன்தாரி முறையில் நிலவரியை வசூலிக்கும் தொல்லை அரசுக்கு இல்லை. தனியாக அலுவலர்களோ, செலவோ இல்லாமல் எண்ணற்ற சாகுபடி

யாளர்களிடமிருந்து சிறுகச் சிறுக வரி வாங்குவதற்குப் பதிலாக மொத்தமாக வருவாயைப் பெற முடிந்தது.

மூன்ருவதாக, வேளாண்மையில் வாணிபத்தைப் புகுத்த இம்முறை துணை செய்தது. நிலத்தீர்வையைப் பணமாகச் செலுத்தவேண்டுமென்று கட்டாயப்படுத்தியதால் சாகுபடியாளர்கள் விளைச்சலில் ஒரு பகுதியை விற்கவேண்டிய கட்டாயத்துக்குள்ளாயினர்.

நான்காவதாக, வரி திரட்டுகின்ற சமீன்தார்கள், தாசில்தார்கள் ஆகியோர் அரசுக்கு வேண்டியவர்களானார்கள். ஆங்கிலேய ஆட்சிக்கு உற்ற துணையாக ஓர் அணி உருவாக இம் முறை துணை செய்தது.

சில சீர்கேடுகள் :

சமீன்தாரி முறை சாகுபடியாளர்களுக்கு நன்மை விளைக்கவில்லை. மாருக அவர்களுக்குத் தொல்லைகளும் துன்பங்களுமே அளித்தது. சமீன்தாரி முறையின் சீர்கேடுகளைக் கீழ்க்காணுமாறு கூறலாம்:

முதலாவதாக, சமீன்தார்கள் நிலவரி வாங்குவதில் தான் ஆர்வமிக்கவர்களாக இருந்தனர். எதிர்பார்த்ததைப் போல, நிலத்தில் வளம் சேர்க்கவோ, பயிரிடுகின்றவர்களுக்கு உதவிசெய்து உற்பத்தியைப் பெருக்கவோ அவர்கள் முயலவில்லை.

இரண்டாவதாக, சமீன்தார்கள் சுரண்டல்காரர்களாக மாறினர். உச்ச அளவில் நிலவரியைப் பெற்றனர். வரி வசூலிப்பதில் ஈவு, இரக்கமின்றி நடந்துகொண்டனர்.

மூன்ருவதாக, சமீன்தார்கள் ஆங்கிலேயர்களின் கால் வருடிகளாக இருந்தனர். நீண்டகாலம் நாடு அடிமைப் பட்டிருக்க அவர்களும் ஒரு காரணரானர்கள்.

நான்காவதாக, அரசுக்கும் நிலத்தைப் பயிரிடுகின்றவர்களுக்கும் இருந்த நேரடித் தொடர்பு அழிந்தது. உழவர்களின் துயர்களை அரசு அறிந்தாலும் அறியாததுபோல் நடந்துகொண்டது.

ஐந்தாவதாக, கிராமங்களில் 'பணம்' நுழைய இம்முறை வழிவகுத்தது. சாகுபடியாளர்களிடம் வாணிப நோக்குத் தலைதூக்கியது. இதனால் கிராமங்களிலிருந்த தன்னிறைவுத் தன்மை பாழ்பட்டது.

## II. மகல்வாரி முறை (mahalwari settlement) :

சமீன்தாரி முறையிலுள்ள குறைகளை அறிந்த ஆங்கிலேய மேலிடத்தினர் நிலவுரிமை—உடைமை முறையில் மாற்றங்கள் செய்யவேண்டுமென்று கருதினர். வங்காளத்திலிருந்த ஆட்சியாளர்கள் சமீன்தாரி முறையே சிறந்ததென வாதிட்டனர். ஆதலால் முதலில் ஆக்ராவிலும், அயோத்தியிலும், பின்பு பஞ்சாப்பிலும் சமீன்தாரி முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நிலவுரிமை முறையைப் பின்பற்றினர். அதற்குப் பெயர்தான் மகல்வாரி முறை.

மகல்வாரி முறையில் அரசு கிராம சமுதாயத்தோடு நிலவரி ஒப்பந்தம் செய்துகொண்டது. இத் திட்டப்படி கிராமத்து மக்கள் மொத்தமாக நிர்ணயிக்கப்பெற்ற வரியைக் கட்டவேண்டும். இந்த வகையில் நிலவரி செலுத்துவது தனிப்பட்டவர்களின் பொறுப்பாகவும் கூட்டுப் பொறுப்பாகவும் இருந்தது.

கிராம வரி செலுத்தும் வட்டாரத்திற்குள்ளிருந்த நிலம் எல்லாம் கிராமத்திற்குச் சொந்தமாக இருந்தது. கிராம சமுதாயத்தினர் நிலத்தைக் குத்தகைக்குக் கொடுத்தனர். மக்களிடம் நிலத்தீர்வைகளை வாங்கி அரசுக்குச் செலுத்தும் பொறுப்பு சமுதாயத்தினுடையதாகும்.

மகல் என்னும் வட்டாரம் செலுத்த வேண்டிய தீர்வையின் அளவை நிர்ணயிக்கின்றபொழுது நிலத்தின்

வளத்தையும் அதன் விளைவாற்றலையும் கணக்கில் எடுத்துக் கொண்டனர்.

கிராம சமுதாயம் நிலத்தீர்வைகளைத் திரட்டிக் கொடுக்கும் பணியை மட்டும் செய்யாமல், நிலத்தின் வளத்தைப் பெருக்கக் கால்வாய் வெட்டுதல் போன்ற பணிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கருதினர்.

மகல்வாரி முறை எதிர்பார்த்த அளவில் வெற்றி பெறவில்லை. ஆதலால் அம்முறையை மற்றப்பகுதிகளில் பின்பற்ற ஆங்கிலேயர்கள் விரும்பவில்லை.

iii. ரையத்வாரி முறை (ryotwari system)

சமீன்தாரி முறையில் குடியானவர்களின் துயர்கள் மிகுதியானதாலும், மகல்வாரித் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் பல சிக்கல்கள் இருந்தமையாலும், மாறுபட்ட நிலவுடைமை முறை ஒன்றை 1793 இல் சென்னை மாநிலத்தில் சர் தாமஸ் மன்ரோ கொண்டுவந்தார். இந்தத் திட்டத்தைப் பின்பு பம்பாய், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் செயல்படுத்தினர்.

எல்பின்ஸ்டோன் (Elphinstone) தமது அறிக்கையில் இம் முறையைப்பற்றி, ''எண்ணிக்கையில் மிகுதியான ரையத்துக்கள் எனப்பெற்ற உழவர்கள் அவர்களுடைய பண்ணைகளுக்குச் சொந்தக்காரரர்கள். அவர்கள் அரசுக்குக் குறிப்பிட்ட அளவில் நிலவரியைச் செலுத்த வேண்டும். அவர்களுடைய சொத்து பரம்பரையாகக் கைமாறவோ விற்கவோ கூடியதாகும். வரியை ஒழுங்காகச் செலுத்து கின்றவரை அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றுவ தில்லை,'' என்று கூறுகின்றார்.

தலையாய இயல்புகள் :

ரையத்வாரி முறையின் முதன்மையான இயல்புகளைக் கீழ்க் காணுமாறு கூறலாம்:

முதலாவதாக, ஒவ்வொரு சாகுபடியாளரும் எவ்வளவு தீர்வை செலுத்த வேண்டுமென்பதைத் தனித்தனியாக நிர்ணயித்தார்கள்.

இரண்டாவதாக, ஒவ்வொரு நிலத்தின் அளவையும் அளந்து, திட்டவட்டமாகக் கணக்கிட்டார்கள். அதனுடைய தரத்தையும் நிர்ணயித்தார்கள்.

மூன்றாவதாக, ஒவ்வொரு நிலத்திலும் எவ்வளவு விளையுமென்பதை மதிப்பிட்டார்கள்.

நான்காவதாக, விளைச்சலில் 55 விழுக்காடு % தீர்வையாகச் செலுத்தவேண்டுமென்று நிர்ணயித்தார்கள்.

ஐந்தாவதாக, பயிரிடாமலிருந்த நிலத்தையும் அளந்து கணக்கிட்டார்கள்.

**சிறப்புத்தன்மைகள் :**

ரையத்வாரி முறை மற்றைய முறைகளிலிருந்து சில சிறப்பான தன்மைகளின் காரணமாக உயர்வானதாக இருந்தது.

முதலாவதாக, அரசுக்கும் உழவர்களுக்கும் இடையில் நேரடித் தொடர்பு ஏற்பட்டது. இம் முறையில் இடைத் தரகர்கள் இல்லை.

இரண்டாவதாக, ஒவ்வொரு பயிரிடுபவரின் நிலமும் அளந்து நிர்ணயிக்கப்பெற்றதால், நில உரிமைக் குழப்பங்கள் குறைந்தன. எது யாருடைய நிலமென்பதைப் பதிவு செய்திருந்தனர்.

மூன்றாவதாக, தீர்வையின் அளவை நிலத்தின் விளைச்சலுக்கேற்பக் கூட்டவோ, குறைக்கவோ இம் முறையில் வழி இருந்தது.

நான்காவதாக, தவறாமல் வரிகட்டிவருகின்ற சாகுபடியாளருக்கு நிலம் சொந்தமானது. அவர் நிலத்தைக்

குத்தகைக்கு விடவோ, விற்பனை செய்யவோ உரிமை பெற்றிருந்தார்.

ஐந்தாவதாக, சாகுபடி செய்யாத நிலத்தை அரசிடமிருந்து குத்தகைக்குப் பெற்றுச் சாகுபடி செய்யலாம். இதனால் விளை நிலத்தின் அளவு கூடியது.

குறைகள்:

ரையத்வாரி முறையிலும் சில குறைகள் இருந்தன. இந்தக் குறைகள் பெரும்பாலும் இம்முறையைச் செயல்படுத்திய நடைமுறையில் தோன்றியவையாகும்.

முதலாவதாக, நில அளவைகள் சரியானதாக இல்லை. தவறான அளவைகள் தவறான தீர்வைக்கு அடிகோலின.

இரண்டாவதாக, விளைச்சலைப்பற்றிய மதிப்பீடும் தவறுடையதாக இருந்தது. அரசின் அலுவலர்கள் தங்கள் விருப்பம்போல் விளைச்சலின் அளவைக் குறித்தனர்.

மூன்றாவதாக, நிலத்தீர்வையின் அளவு மிகுதியாக இருந்தது. ஏழை உழவர்களுக்கு வரி சுமையாகியது.

## சென்னைமாநில நிலவரித் திட்டம்

1820 முதல் 1827 வரை சர் தாமஸ் மன்ரோ (Sir Thomas Munro) சென்னை மாநிலத்தின் ஆளுநராக இருந்தார். அவர் சென்னைமாநிலத்தில் எங்கெல்லாம் நிலையான நிலவுரிமை ஏற்பாட்டைச் (permanent settlement) செய்யவில்லையோ அங்கெல்லாம் ரையத்வாரி முறையைத் திட்டமிட்டுச் செயல்படுத்தினார். அந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் பல்வேறு நிலவுடைமை முறைகள் நிலவின. அவற்றைப்பற்றிச் சுருக்கமாகக் கூறலாம்.

சமீன்தாரி முறை :

சென்னைமாநிலத்தின் சில பகுதிகளில் சமீன்தாரி முறை இருந்தது. இந்த வட்டாரங்களில் நிலவுடைமை

யாளர்களாகச் சமீன்தார்கள் விளங்கினர். சமீன்தார்களுக்கு நிலவுரிமை தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வந்தது. அவர்கள் சாகுபடியாளர்களிடம் நிலத்தீர்வையை வாங்கி அரசுக்குச் செலுத்தினர்.

இந்தியாவில் மற்றைய பகுதிகளில் இருந்ததைப் போன்றே இங்கும் சமீன்தார்கள் குடியானவர்களைச் சுரண்டி வாழ்பவர்களாக இருந்தனர். அவர்களின் ஆட்சி கொடிகட்டிப் பறந்ததால் அவர்களை ஏனென்று கேட்க ஆளில்லை. ஆங்கிலேய ஆட்சியாளர்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டு, தங்களது வட்டாரத்திற்குள் அரசர்களைப்போல ஆட்சி நடத்தினர்.

மௌசவாரி முறை :

மிகத் தொன்மைக் காலத்திலிருந்து சென்னை மாநிலத்தில் தனித்தன்மைகளோடு அமைந்திருந்த ஒரு வகை நிலவுடைமை முறையை மௌசவாரி முறை என்கின்றனர். இம்முறையில் ஒரு கிராமத்திலுள்ள நிலம் முழுவதும் கிராம சமுதாயத்திற்கோ தனிப்பட்ட ஓராளுக்கோ சொந்தமாக இருந்தது.

தமிழகத்தில் வட ஆர்க்காடு, தென்ஆர்க்காடு மாவட்டங்களில் புழக்கத்திலிருந்த இம் முறையில் குடியானவர்கள் தனிப்பட்ட முறையில் சாகுபடி செய்தனர். ஒவ்வொரு சாகுபடியாளரும் எவ்வளவு தீர்வை கொடுக்க வேண்டுமென்பதைக் கிராமச் சமுதாயமோ, தனிப்பெரும் நிலவுடைமையாளரோ தீர்மானித்தார். சில இடங்களில் கிராமத்தின் மொத்த விளைச்சலில் நிலத்தீர்வை போக மீதியைக் கிராமத்திலுள்ள சாகுபடியாளர்கள் தங்களது பயிரிட்ட நிலத்தின் அளவிற்கேற்பப் பெற்றுக்கொண்டனர்.

**மிராசுதார்கள் என்னும் நிலக்கிழார்கள் :**

பல இடங்களில் மிராசுதார்கள் என்னும் நிலக்கிழார்கள் நிலத்திற்கு உரிமையாளர்களாக இருந்தனர்.

இவர்கள் தங்களது நிலத்தைக் குத்தகைக்கு விட்டு அதற்குரிய வாரம் பெற்றனர்.

மிராசுதார்களின் நிலங்களை வாரத்திற்குச் சாகுபடி செய்தவர்களை இருபிரிவினராகப் பகுக்கலாம். ஒரு பிரிவினர் 'உள்குடி' என்னும் உள்ளூர் உழவர்கள். இவர்கள் நிலத்தின்மீது மிகுந்த உரிமை கொண்டாடினர். இவர்கள் பயிரிட்ட நிலத்திலிருந்து இவர்களை வெளியேற்றுவது எளிதன்று மற்றொரு பிரிவினர் 'புறக்குடிகள்' எனப்பெற்ற வெளியூர்க்காரர்கள். இவர்கள் தங்களது விருப்பம்போல் இடம்பெயரக் கூடியவர்கள். ஊர் ஊராகச் சென்று தங்கி வேளாண்மை செய்துவந்தார்கள்.

பண்ணையார்கள் (home farm owners) :

சென்னை மாநிலத்தில் பல இடங்களில் நிலத்தைத் தாங்களே சாகுபடி செய்த பண்ணையார்கள் இருந்தனர். இவர்கள் பண்ணையாள் முறையில் கூலிக்காரர்களையும், கொத்தடிமைகள் போல் இருந்த தாழ்ந்த இனத்தவர்களையும் வைத்துக்கொண்டு வேளாண்மை செய்தனர்.

ஒரு மதிப்பீடு :

சென்னையில் பலவகையான நிலவுடைமை முறை இருந்த போதிலும் மன்ரோ தமது ரையத்வாரி முறையின் மூலம் சாகுபடியாளர்களுக்கு நிலவுரிமையை வழங்க நடவடிக்கை எடுத்தார்.

நிலவரி வாங்குவதைத் தொழிலாகக் கொண்டவர்கள் ஒவ்வோர் ஊரிலும் இருந்தனர். இவர்களது ஊதியம் மிகக் குறைவாக இருந்தது. ஆதலால் அவர்கள் குடியானவர்களிடம் எவ்வளவுக்கு எவ்வளவு மிகுதியாக நிலத்தீர்வை வாங்க முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு வாங்கினர். இதனால் உழவர்கள் அல்லற்பட்டனர்.

ஆங்கிலேயர்கள் நிலவுடைமை—உரிமை—வரி முறையில்செய்த மாற்றங்களால் நிலம் மதிப்புடைய பொருளாகியது. ஆதலால் மக்கள் அதனை வாங்கி, விற்றனர். பணத்தால் நிலத்தீர்வையைச் செலுத்தக் கட்டாயப் படுத்தியதால் இந்தியப் பொருளாதாரத்தின் தன்னிறைவு, தற்சார்பு, தன்னாட்சி இயல்புகள் அழியத் தொடங்கின.

ஆங்கிலேயர்களின் ஆட்சி இங்கு வலிமையுடன் வேரூன்ற நிலவுடைமை மாற்றங்கள் துணை செய்தன. அரசியல் அடிமைத்தனம் நிலையாக வருவதற்கு முன்பே மக்கள் பொருளாதார அடிமைத்தனத்திற்கு ஆளானார்கள்.

# 9. சமுதாயப் பொருளாதாரச் சூழ்நிலை

ஆங்கிலேயக் கிழக்கு இந்திய நிறுவனம் வாணிப மேலாதிக்கம் பெற்று, இந்திய ஆட்சியைத் தனக்குள் கொண்டுவந்த காலத்திலிருந்த சமுதாய, பொருளாதார நிலைகளை விளக்கலாம்.

## I. சமுதாயச் சூழ்நிலை

மிகவும் பழைமையான சமுதாயப் பிரிவுகளையும், பழக்க வழக்கங்களையும் கொண்டதாக இந்தியச் சமுதாயம் இருந்தது. நீண்ட நெடுங்காலமாகப் பெரிய மாற்றத் திற்குள்ளாகாமல் தன் போக்கில் இயங்கிக்கொண்டிருந்த கிராம சமுதாயத்தில் ஒரு தேக்க நிலை உருவானது. அதனுடைய அகக் கட்டுமானங்கள் நெகிழ்வற்றிருந் தமையால் வளர்ச்சி தடைப்பட்டது.

சாதி முறை :

"ஆயிரம் உண்டிங்கு சாதி," என்று மகாகவி பாரதியார் பாடுகின்றார். ஆயிரக்கணக்கான சாதிகளும், அவற்றின் கட்டமைப்பும், அடுக்கு முறையும் பதினெட்டாம் நூற்றாண்டில் உறுதிப்பட்ட நிலையிலிருந்தன. ஒருவனை அவன் பிறந்த குடும்பம், குலப்பிரிவு. இனப்பிரிவு, சாதி ஆகியவற்றின் அடிப்படையிலேயே நோக்கினர்.

சாதிமுறையின் அடிப்படை ஒருவன் அந்தச் சாதிப் பிரிவுக்குள்ளேயே மணவினைத் தொடர்புகளை வைத்துக் கொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாட்டில் அமைந்திருந்தது. வேறு சாதியில் பெண்கொள்வதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் பிறப்பின்வழியாகவே சாதிமுறை மாறாமல் தொடர்ந்து வந்தது.

நான்கு வருணங்கள் :

ஆரியர்களின் வருகையை ஒட்டித் தொழில் பகுப்பின் அடிப்படையில் சமுதாயத்தை நான்கு பெரும்பிரிவு களாகப் பகுத்தனர். சமுதாயத்தின் மேல்தட்டில் அறிவாற்றல்மிக்க, ஆன்மீக ஈடுபாடு கொண்ட, சமயத் தலைமை ஏற்ற பிராமணர்கள் என்னும் பார்ப்பனர்கள் இருந்தனர். இவர்களுக்கு அடுத்த நிலையில் நாட்டை ஆண்ட—போர் செய்து நாட்டைக் காத்த சத்திரியர்கள் இருந்தனர். மூன்றும் நிலையில், வாணிபம், பயிர்த்தொழில் மூலம் பொருளை உற்பத்தி செய்கின்ற, பகிர்ந்தளிக்கின்ற வைசியர்கள் இருந்தனர். நான்காவதாக, முழுவதும் உடல் உழைப்புச் செய்த, அடிமைப்பட்டதைப் போல ஏவிய வேலைகளைச் செய்துகொண்டிருந்த, இழி தொழில்க ளாகக் கருதப்பெற்றவற்றைச் செய்த சூத்திரர்கள் இருந்தனர்.

இந்த நான்கு பகுப்புக்களும் முதன் முதலில் தொழிலின் அடிப்படையில் இருந்தன. பின்னால் அவற்றைப் பிறப்பின் அடிப்படையில் மாற்றினர். நான்கு பிரிவுகளும் நூற்றுக்கணக்கான சாதிப்பிரிவுகளாகக் கிளர்ந்தன. தொழிலுக்கும் சாதிக்கும் தொடர்பை நிலை நாட்டினர். சாதிகளுக்குள் உட்பிரிவுகள் ஏற்பட்டன. சாதிகளை உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி எனக் கற்பித்தனர். சமுதாய ஏற்றத்தாழ்வு மிகவும் ஆழமாக ஏற்பட்டது.

தீண்டாமை :

இந்து சமய அடிப்படையில் சாதிமுறையை நியாயப் படுத்தினர். இந்த முறையில் ஏற்பட்ட பெருங்கொடுமை தீண்டாமையைப் பேணி வளர்த்ததாகும். சில சாதி யினரைத் தொட்டாலே பாவமென்று கருதினர். மலையா ளத்தில் ‘பார்த்தாலே பாவம்’ என்று சிலரை ஒதுக்கிய நிலை இருந்தது.

தீண்டாமையின் கொடுமையை ஒழிக்க இருபதாம் நூற்றுண்டில் காந்தியடிகள் பெரும் அறப்போர் நடத்தினர். இன்றும் தீண்டாமைப் பழக்கத்தின் எஞ்சிய பகுதிகளைப் போக்குவதற்கு அரசு சட்டம் வகுத்துள்ளது.

தொழில்களும் சாதிப்பிரிவும் :

ஒவ்வொருவரும் என்ன தொழில் செய்யவேண்டு மென்பதைப் பிறப்பை ஒட்டி அமைந்த சாதியே தீர்மானித்தது. குலத்தொழில் முறையில் ஒருவனுக்கு இயல்பாகத் தொழில் பயிற்சி கிடைத்தது. ஆனால், இம் முறைபொருளாதார முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்தது.

சாதிமுறையில் தொழில்கள் அமைந்திருந்ததால் மரபு வழித் தொழில்களைப் பழைய முறையிலேயே மக்கள் செய்துகொண்டிருந்தனர். ஒருவர் தம் திறமைக்கும், விருப்பத்திற்கும் ஏற்ற தொழிலில் ஈடுபட முடியவில்லை. இதனால் ஆக்கத்திறன் குறைந்தது. புதுப்புதுத் தொழில்கள் பூத்துக்குலுங்கச் சமுதாயக் கட்டமைப்பு நெகிழ்ந்து இடமளிக்கவில்லை.

கண்மூடிப் பழக்க வழக்கங்கள் :

சமயத்தின் பெயரால் மக்கள் பல்வேறு பழக்க வழக்கங் களுக்கு ஆட்பட்டிருந்தனர். சமயத்தினுடைய ஆசாரங் களின் பெயராலும், சாதிமுறைக் கட்டுத் திட்டங்களாலும் எளிதாக மக்களைக் கட்டுப்படுத்தினர்.

மக்கள் சமயத்தின் பெயரால் பல கண்மூடிப் பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டனர். சடங்குகளுக்காகத் தங்களுடைய வருவாய் நிலைக்குமேல் செலவிட்டனர். இதனால் பொருள் இழப்போடு கடன்படுகின்ற நிலையும் ஏற்பட்டது. மக்களின் வளர்ச்சிக்கு இந்நிலை தடையாக இருந்தது.

## II. பொருளாதார அமைப்பு முறை

ஆங்கிலேயர்களின் வருகையால் சமுதாய அமைப்புப் பெரிதும் பாதிக்கப்படவில்லை; ஆனால், பொருளாதார அமைப்பு மிகவும் பாதிக்கப்பட்டது. இந்நாட்டு மக்களின் அறியாமையைப் பயன்படுத்திக்கொண்டு ஆங்கிலேயர்களும், இங்கிருந்த செல்வந்தர்களும் சுரண்டினர். அன்றிருந்த நிலையின் தலையாய கூறுபாடுகளை மட்டும் விளக்கலாம்.

**கிராம அமைப்பு முறை :**

பொருளாதார அமைப்பின் ஆதார அலகாகக் கிராமம் இருந்தது. கிராமத்தின் ஆட்சி அமைப்பை ஒட்டிப் பொருளாதார நடவடிக்கைகள் இருந்தன.

கிராமத்தின் தலைவராக **நாட்டாண்மைக்காரர்** இருந்தார். அவர் கிராமத்தின் பொதுப் பணிகளை எல்லாம் தலைமைப் பொறுப்பேற்று நடத்தினர். அவர் நிலத் தீர்வையைத் திரட்டும் பணியைச் செய்தார். ஊர் மக்களுக் கிடையில் சண்டை சச்சரவு ஏற்பட்டால் தீர்த்து வைத்தார். அறங்கூறும் பணியோடு ஊரின் அமைதியைக் கட்டிக் காக்கும் கடமையும் அவருக்கிருந்தது.

நாட்டாண்மைக்குத் துணையாக இருந்தவரை **கர்ணம்** அல்லது **கணக்குப் பிள்ளை** என்று கூறினர். அவர் நிலவுடைமை, விளைச்சல் போன்ற விவரங்களைப் பதிந்து வைத்தார். நிலவரி செலுத்திய கணக்கும் அவரிட மிருந்தது.

ஊரில் காவல் பொறுப்பேற்றிருந்தவரைத் **தலையாரி** என்று அழைத்தனர். இன்று காவலர் (Police) செய்கின்ற பணியை அன்று கிராமங்களில் தலையாரி செய்தார்.

இவர்கள் தவிரச் சமயச்சடங்குகளைச் செய்கின்ற பிராமணரும் பிராமணரல்லாதாரும், கல்வி கற்றுத் தருகின்ற ஆசிரியர், காலம் கணித்துக் கூறும் சோதிடர், மற்றும் சலவைத்தொழிலாளர், முடிதிருத்தும் தொழிலாளர் போன்ற பல்வேறு பணியாளர்களும் இருந்தனர்.

**வேளாண்மை :**

முதன்மைத் தொழிலாக வேளாண்மை இருந்தது. பயிர்த்தொழில் செய்பவர்கள் கடினமாக உழைத்தனர். கட்ட வேண்டிய நிலத்தீர்வை சுமையாக மாறிய பிறகு, பல்வேறு வகையில் சுரண்டுகின்றவர்கள் பெருகிய பொழுது, பயிர்த்தொழிலாளர்களின் வாழ்க்கை அல்லல் நிறைந்ததாக மாறியது.

குடியானவர்கள் இடைமனிதர்களால் பெருந்துயர் களுக்கு ஆளானார்கள். ஆங்கிலேயர்களின் விருப்பப்படி அவர்களுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கினர். அதன் விளைவாக அவர்களது வாழ்க்கைநிலை மிகவும் தாழ்ந்தது.

**சிறு தொழில்களின் சீர்குலைவு :**

கிழக்கு இந்திய நிறுவனத்தின் கொள்கையினாலும் நடைமுறையினாலும் இந்தியச் சிறு தொழில்கள் செய லிழந்து, சீர்குலைந்து அழியலாயின. அவற்றில் ஈடு பட்டிருந்த எண்ணற்ற தொழிலாளர்கள் வேலையிழந்து வாடினர். கிராமத்தின் தன்னிறைவு நிலை பாழ்பட இது ஒரு காரணமாயிற்று.

**பணப் பொருளாதாரம் :**

இந்தியாவிலிருந்த பண்டமாற்றுப் பொருளாதாரம் பணப் பொருளாதாரமாக மாறத் தொடங்கியது. அதுவரை பணத்தைப்பற்றிக் கவலைப்படாமலிருந்த மக்கள், நிலவரி செலுத்தவும், பிறவற்றிற்கும் பணத்தைத் தேடலானார்கள். இதற்காக உழவர்கள் தங்களுடைய விளைபொருள்களை விற்க வேண்டியவர்களாயினர்.

**ஏற்றத்தாழ்வும் வறுமையும் :**

கிழக்கு இந்திய வாணிப நிறுவனத்தின் ஆட்சிக் காலத்தில் சிலர் வளமாக வாழ்ந்தனர். ஆனால், மிகப்பலர்

வறுமையில் வாடினர். மக்களுக்கிடையிலிருந்த ஏற்றத் தாழ்வு விரைவாக வளர்ந்தது.

வறுமையில் வாடுகின்ற மக்களின் எண்ணிக்கை பெருகியது. இந்திய வறுமையைப் பற்றி உலகமே பேசுகின்ற அளவிற்கு இந்திய மக்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் கீழான, இரங்கத்தக்க நிலையில் இருந்தது. பஞ்சமும் பட்டினியும் இந்தியப் பொருளாதாரத்தின் பொதுவான இயல்புகளாயின.

மாறிய பொருளாதாரம் :

பதினெட்டாம் நூற்றுண்டில் இந்தியப் பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. இந்த மாற்றத்தை அக்கால மக்கள் உணராவிட்டாலும் பின்னுல் இந்தியப் பொருளாதார வரலாற்றை எழுதியவர்கள் உணர்ந்து, அறிந்து குறிப்பிட்டனர்.

இந்தியா ஒரு பழம்பெரும் நாடு. இங்கிருந்த சமுதாய, பொருளாதாரக் கட்டமைப்புக்கள் நீண்ட காலப் பின்புலத்தைக் கொண்டிருந்தன. நெகிழ்ச்சியற்றிருந்த இவற்றின் உறுதிப்பாட்டை ஆங்கிலேயர்களின் வாணிப, பொருளாதார நடவடிக்கைகள் தகர்த்தன. "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பது பழமொழி. இந்தியப் பொருளாதாரத்தின்மீது கிழக்கு இந்திய நிறுவனத்தின் நடவடிக்கைகள் அடிமேல் அடியாக விழுந்து அதன் நிலையை மாற்றின.

இந்தியா, கிழக்கு இந்திய நிறுவனத்தின் கையிலிருந்து இங்கிலாந்து அரசின் நேரடியான ஆட்சியின் கீழ்ச் சென்றபிறகு இந்தியப் பொருளாதாரம் உருமாறிப் புதியதொரு நிலைக்குச் சென்றது. அதனை இந்தியப் பொருளாதார வளர்ச்சிப் போக்கில் அடுத்த கட்டமாகக் கருதலாம்.

## கலைச்சொற்கள்

அங்காடி - market
அலகு - unit
ஆளுநர் - Governor
இடையாள்கள் - middlemen
உரிமைகள் - rights
உற்பத்திக்காரணிகள் -factors of production
உற்பத்திமுறை - production method
எச்சம் - surplus
ஏற்றுமதி - export
கடன் கொடுப்போர் (லேவா தேவிக்காரர்கள்) - money lenders
கிழக்கு இந்திய நிறுவனம் - East India Company
குத்தகைதார் - tenant
கைத்தொழில்கள் - handicrafts
கைவினைஞர்கள் - artisans
சாகுபடி, பயிரிடுதல் - cultivation
சாசனம் - charter
சுரண்டல் - exploitation
செய்பொருள்கள்-manufactured commodities.
தரகு - commission
தன்னிறைவு - self-sufficiency
தொழிற்குழு - guild
நாடாளுமன்றம் - parliament
நிலக்கிழார் - land lord
நிலப்பிரபுத்துவமுறை - feudalism
நிலவுடைமை - land-ownership
நிலையான நிலத்தீர்வை நிர்ணயம் - permanent land settlement
பண்டமாற்று - barter
பண்ணை - farm
போட்டி - competition
மாநிலம் - province, state
மாவட்டத் தண்டல் தலைவர் - collector
வரி - tax
வறுமை - poverty
வாணிபம் - commerce
வேளாண்மை, உழவுத்தொழில் - Agriculture

# கருவி நூல்கள்


1 *R. C. Majumdar:* British Paramountcy and Indian Renaissance Part I.

2. *James Mill :* History of British India.

3. *Dadabhai Naoroji :* Poverty and Un-British Rule in India.

4. *Dr. Sarada Raju :* Economic Condition in the Madras Presidency, 1800 - 1850.

5. *Radhakamal Mukerjee:* The Eccnomic History of India.

6. *R. Mukerjee :* The Rise and Fall of East India Company

7. *Dutt :* The Economic History of India under Early British Rule.

8. *Vera Anstey :* The Economic Development of India

9. *Baden Powell :* Land Settlements in India.


———

# மாதிரிக் கேள்வித்தாள்

I

காலம் 2-30 மணி [மதிப்பெண் 100

I கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிரப்புக. 12.

1. பதினெட்டாம் நூற்றாண்டின் இந்தியப் பொருளாதார அமைப்பு முறையை——முறை எனலாம்.
2. பண்டைக் காலத்திலிருந்த வாணிப முறையை ——முறை என்று கூறலாம்.
3. பண்டைய இந்தியக் கிராமங்கள்——கிராமங்களாக இருந்தன.
4. 'பொருளின் நிழல்' என்று———துணியைப் போற்றினர்.
5. 'ரையத்' என்ற சொல்லுக்கு———என்பது பொருள்.
6. முதலில் இந்தியாவிற்கு——வந்தனர்.
7. ஆங்கிலேயர்களோடு நீண்டகாலம் வாணிபப் போட்டியில் ஈடுபட்டவர்கள் ——
8. கிராமம் மொத்தமாக நிலவரி செலுத்திய நிலவுடைமை முறைக்கு——என்று பெயர்.
9. சென்னை மாநிலத்தில்——என்பவர் நிலவரிச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தார்.
10. ஆங்கிலேய கிழக்கு இந்திய நிறுவனத்திற்கு—அரசி தனி வாணிப உரிமை வழங்கினர்.

11. ஆங்கிலேயர்கள் சென்னையை———மன்னரிட மிருந்து பெற்றனர்.

12. மைசூரில் ஆங்கிலேயர்களுக்கு முதல் தடையாக ——இருந்தார்.

II எவையேனும் ஏழு கேள்விகளுக்கு ஓரிரு வாக்கியங்களில் குறுகிய அளவில் விடை தருக. 7×4=28

13. உழவர்கள் கிராமம் என்றால் என்ன ?

14. கூட்டுக்கிராமம் என்றால் என்ன?

15. தொழிற் குழுக்களைப் (guilds) பற்றிக் கூறுக.

16. பண்டைய இந்தியாவின் போக்குவரத்து நிலையை விளக்குக.

17. ஆங்கிலேயர் வருகைக்கு முன்னால் துணித் தொழில் எப்படி இருந்தது?

18. ஆங்கிலேயர்கள் முதன் முதலில் இந்தியாவி லிருந்து கொண்டுசென்ற பொருள்கள் யாவை?

19. இந்தியத் தொழில் நகரங்கள் ஏன் சீர் குலைந்தன?

20. மௌசவாரி முறை என்றால் என்ன ?

21. நான்கு வருணங்களை விளக்குக.

III எவையேனும் ஐந்து கேள்விகளுக்கு ஒரு பக்க அளவில் விரிவாக விடை தருக. 5×6=30

22. பண்டைய இந்தியக் கிராமத்தின் தொழில் பகுப்பை விவரிக்க.

23. 18ஆம் நூற்றாண்டில் நிலக்கிழார்களின் பெருக் கத்திற்கான காரணங்களைக் கூறுக.

24. பண்டைய உள்நாட்டுக் கடன்முறை எவ்வாறு சுரண்டலுக்கு வழி வகுத்தது ?

25. டச்சுக்காரர்களை எவ்வாறு ஆங்கிலேயர்கள் வாணிபப் போட்டியில் வென்றனர் ?

26. ஆங்கிலேயர்கள் வங்காளத்தில் வாணிப மேலாதிக்கம் பெற்றதை விளக்குக.

27. சென்னைமாநில நிலவரித் திட்டத்தின் இயல்புகளைக் கூறுக.

28. ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு முந்திய சமுதாயச் சூழ்நிலையைச் சுருக்கமாக எழுதுக.

IV. எவையேனும் இரண்டு கேள்விகளுக்கு மூன்று பக்க அளவில் விரிவான விடையளிக்கவும். $2 \times 15 = 30$

29. ஆங்கிலேயர்கள் வருகைக்கு முன்பு இந்தியாவிலிருந்த நிலவுடைமை முறையை விளக்குக.

30. பண்டைய இந்தியாவிலிருந்த சிறுதொழில்களின் சிறப்பையும் அவை சீர்குலைந்த காரணங்களையும் எழுதுக.

31. ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவனத்தின் பொருளாதார நடவடிக்கைகளையும் அவற்றின் விளைவுகளையும் கூறுக.

32. சமீன்தாரி முறையை விளக்கி அதனால் ஆங்கிலேயர் பெற்ற நன்மைகளையும் உழவர்கள் அடைந்த துன்பங்களையும் வரைக.

## மாதிரிக் கேள்வித்தாள் II

**மூன்று பக்க அளவில் விரிவாக விடையளிக்க வேண்டியவை.**

1. தன்னிறைவு பெற்ற கிராம அமைப்பு முறையை எழுதுக.
2. ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பிருந்த பொருளாதார அரசியல் சூழ்நிலைகளை விளக்குக.
3. ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பிருந்த தொழில்களின் நிலையை ஒரு கட்டுரையாக எழுதுக.
4. 18ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்த நிலவுடைமை முறையை எழுதுக.
5. பண்டைய கடன் முறையை விளக்குக.
6. வெளிநாட்டினருக்கிடையில் ஏற்பட்ட வாணிபப் போட்டியில் ஆங்கிலேயர்கள் எவ்வாறு வென்றனர்?
7. ஆங்கிலேய கிழக்கு இந்திய வாணிப நிறுவனத்தின் வாணிப நடவடிக்கைகளை விளக்குக.
8. ஆங்கிலேய கிழக்கு இந்திய நிறுவனத்தின் ஆட்சிக் காலத்தில் நிலவுடைமை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?
9. ரையத்வாரி முறையை விளக்கி மதிப்பீடு செய்க.
10. சமீன்தாரி முறையையும் ரையத்வாரி முறையையும் ஒப்பிடுக.
11. ஆங்கிலேயரின் ஆட்சிக்கு முந்திய சமுதாய பொருளாதாரச் சூழ்நிலைகளைக் கூறுக.

113395

113395